PAFFREL



# தேர்தலும் பிரஜைகளும்

# தேர்தலும் பிரஜைகளும்

## தேர்தல் செயன்முறையில் பிரஜைகளின் செயற்பாடுகளுக்கான வழிகாட்டல்


**வடிவமைப்பு**

சட்டத்தரணி ஜகத் லியனஆராச்சி

LL.B (Colombo), MA (Mass Communication-Kelaniya)



**வெளியீடு**

சுதந்திரம் மற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL)

# தேர்தலும் பிரஜைகளும்

## தேர்தல் செயன்முறையில் பிரஜைகளின் செயற்பாடுகளுக்கான வழிகாட்டல்

**வடிவமைப்பு**

முதல் பதிப்பு -2019 பெப்ரவரி

ISBN 978-955-4082-06-9

**ஆக்கம்**

சட்டத்தரணி ஜகத் லியன ஆராச்சி

LL.B (Colombo), MA (Mass Communication-Kelaniya)

**பக்கங்கள் வடிவமைப்பு**

Grace En-Tzu Chang

**வெளியீடு**

சுதந்திரம் மற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (PAFFREL)
12/3, ரோபட் டெரஸ் ரொபட் குணவர்தன மாவத்தை, கொழும்பு

**பதிப்பு**

சுதந்திரம் மற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (PAFFREL)
இல.16,பாமன்கட வீதி,பேர்ட் பிலேஸ்,கொழும்பு 06

# தேர்தலும் பிரஜைகளும்

## தேர்தல் செயன்முறையில் பிரஜைகளின் செயற்பாடுகளுக்கான வழிகாட்டல்

# உள்ளடக்கம்


I. முகவுரை ........................................................................................ 1
II. அரசு மற்றும் தேர்தல் அதிகாரம் ........................................................ 4
III. இலங்கையின் தேர்தல் சட்டம் ........................................................... 8
IV. தேர்தலொன்றின் பங்காளர்கள் ........................................................ 15
V. தேர்தல் ஒன்றின் செயன்முறை .......................................................... 22
VI. தேர்தல் பிரசாரம் ............................................................................ 34
VII. அதிகமாக இடம்பெறும் தேர்தல் சட்ட மீறல்கள் ................................ 41
VIII. சுதந்திரமானதும் நியாயமானதுமான ஓர் தேர்தலுக்காக பிரஜைகளின் பாத்திரம் ........................................................................ 48
IX. சிறந்த வேட்பாளரை தெரிவு செய்வது எவ்வாறு ................................. 52
X. தேர்தல் காலங்களில் நிதமும் உபயோகிக்கும் சொற்பதங்கள் ......... 61
XI. தேர்தல் அதிகாரிகளின் தொலைபேசி தொடர்புகள் ............................. 69
XII. தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் .................................................. 73

# I.

# முகவுரை

# I. முகவுரை

நியாயமான தேர்தல் போன்றே சரியான மக்கள் பிரதிநிதிகளும் நாட்டின் முன்னேற்றத்திற்கு தீர்மானமிக்க சேவைகளை செய்கின்றார்கள். அதனால் தேர்தலின் சிறப்புகளுக்கும் அப்பால் சென்று மக்களின் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான அனுபவத்தினை பெற்றுக்கொடுக்கும் தேர்தலும் பிரஜைகளும் எனும் கைநூல் மூன்று சமூக அமைப்புகளின் முயற்சியூடாகவே உங்கள் கைகளுக்கு கிடைக்கிறது. அவையாவன பெபரல் அமைப்பு, தேர்தல் வன்முறையை தடுக்கும் மத்திய நிலையம் மற்றும் அப்ரியல், ஆகிய மூன்று அமைப்புகளாலும் ஒன்றிணைந்தாகும். இந்த புத்தகத்தை அச்சிட்டு உங்கள் கைகளுக்கு கொடுக்கும் மூன்று நிறுவனங்களுக்கும் இருப்பது ஒரே எதிர்பார்ப்பாகும். அது இந்த புத்தகத்தை படிக்கும் நீங்கள் தேர்தல் சட்டத்தை கற்று உங்களது அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவீர்களென்றும், நீங்கள் வாக்காளர் பாத்திரத்திலிருந்து அப்பாற் சென்று பிரஜையாக புத்தியுடன் தர்க்க ரீதியில் உங்களது மக்கள் பிரதிநிதிகளை தேர்தெடுப்பதற்கு செயற்படுவீர்கள் என்றும் நாங்கள் நம்புகிறோம்.

அதே போன்று இந்த புத்தகத்தின் மூலம் நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவை உங்களுடன் இருக்கும் மற்றவர்கள், அமைப்புகள் மற்றும் மக்களையும் தெளிவுபெற செய்வதற்கு உபயோகிப்பீர்கள் என்று நாங்கள் ஆணித்தரமாக நம்புகிறோம்.

எங்கள் வேண்டுகோளின்படி இப்புத்தகத்தை வடிவமைத்த சட்டத்தரணி ஜகத் லியனஆராய்ச்சி அவர்களுக்கும் இந்த புத்தகத்தை படித்து மக்களை தெளிவுபடுத்த உள்ள உங்களுக்கும் பெபரல் அமைப்பிற்கும், தேர்தல் வன்முறை தடுப்பு மத்திய நிலையத்திற்கும் மற்றும் அப்ரியல் அமைப்பிற்கும் மனமார்ந்த கௌரவத்தை தெரிவிக்கின்றோம்.

ரோஹன ஹெட்டியாரச்சி
நிறைவேற்று பணிப்பாளர்
பெபரல் அமைப்பு

# II.

# அரசு மற்றும் தேர்தல் அதிகாரம்

# II. அரசு மற்றும் தேர்தல் அதிகாரம்

மானிட வரலாற்றில் ஆரம்ப காலங்களில் நாடு அல்லது அரசின் முழு உரிமை நடைமுறையில் இருந்த ஆட்சியாளர்கள் அல்லது அரசருக்கு இருந்தது. ஆனால் மக்களாட்சி உருவானதன் பின்னர் அரச தலைவரை தெரிவு செய்தலானது மக்களின் விருப்பத்திற்கு ஏற்பவே இடம்பெற்றது. எனவே, நாட்டின் உரிமை அந்த நாட்டு மக்களுக்கு உரித்தானது எனும் எண்ணக்கரு உருவானது. இந்நிலை மேலும் வலுப்பெற்று அது மக்களாட்சியின் இறைமையும் மேலாண்மையும் மக்களுக்கு உரித்தானது என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மக்களுக்குரிய இந்த மேலாண்மை 3 வகையாகும். அவையாவன


1. ஆட்சி அதிகாரம்
2. வாக்குரிமை
3. மனித உரிமை

இவைகளில் பிரஜைகளுக்குரிய ஆட்சி அதிகாரத்தை பிரஜைகள் பயன்படுத்தாததுடன்

அந்த அதிகாரத்தை அரசு பயன்படுத்துகிறது. ஆட்சி அதிகாரங்கள் 3 பிரிவுகளாகும். அவையாவன

1. நிறைவேற்று அதிகாரம்
2. சட்டவாக்க அதிகாரம்
3. நீதித்துறை அதிகாரம்

இந்த அதிகார பரிமாற்றம் தொடர்பாக கீழ்வரும் அட்டவணையின் மூலம் தெளிவுபடுத்தலாம்.




இந்த அட்டவணைக்கு ஏற்ப பிரஜைக்குள்ள நிறைவேற்று, சட்டவாக்கம் மற்றும் நீதித்துறை ஆகிய அதிகாரங்களை அரசிற்கு பெற்றுக்கொடுத்துள்ளதுடன் வாக்குரிமை மற்றும் மனித உரிமையை யாருக்கும் வழங்காது பிரஜைகளே அனுபவிக்கின்றனர்.

அவ்வாறு நிறைவேற்று, சட்டவாக்கம் மற்றும் நீதித்துறை எனும் ஆட்சி அதிகாரத்தை அரசிற்கு பெற்றுக்கொடுத்து, அதன் அதிகாரத்தை அரசினால் சரியான விதத்தில் நடைமுறைப்படுத்துவதற்காக, பிரஜைகள் வாக்குரிமை மற்றும் மனித உரிமையை பயன்படுத்துவர்.

இதற்கமைவாக பிரஜைகளுக்குரிய வாக்குரிமை மற்றும் மனித உரிமைகள் மக்களின் மேலாண்மை என்ற அடிப்படையில் இன்னொருவருக்கு கையளிக்க முடியாத பகுதியாகவே கிடைக்கப்பெறுகிறது. அதுமட்டுமின்றி அரசு என்பது பிரஜைகளின் ஆட்சி அதிகாரத்தை பிரஜைகளுக்காக பயன்படுத்தும் நிறுவனம் என்பதால் அனைத்து அரச நிறுவனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களும் பிரஜைகளின் வாக்குரிமை மற்றும் மனித உரிமைக்கு மதிப்பளித்தல் வேண்டும்.

இதனால் அனைத்து குடியரசுகளிலும் தனது அரசியலமைப்பில் பிரஜை மற்றும் அரசிற்கு இடையிலுள்ள தொடர்புகளை ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு ஆவணப்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் அடிப்படையில் ஒவ்வொரு அரசிலும் தன் பிரஜைகளின் உரிமை மற்றும் அதிகாரங்களை அறிந்து கொள்ள முடியும்.

இதற்கமைய அனைத்து ஜனநாயக அரசும் குறிப்பிட்ட கால வரையறைக்குள் தேர்தலை நடாத்துவது மற்றும் மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்வது இடம்பெறும்

அதற்கமைய மக்கள் மேலாண்மையில் வாக்களிப்பது முக்கிய அங்கமாக அமைகிறது. அது சுயாதீனமாகவும் சுதந்திரமாகவும் இடம்பெறுவதால் நாட்டினுள் ஆரோக்கியமான ஜனநாயக ஆட்சியை உருவாக்க முடியும்.

# III.

# இலங்கையின் தேர்தல் சட்டம்

# III. இலங்கையின் தேர்தல் சட்டம்

## தேர்தல் தொடர்பான அடிப்படைச் சட்டம்

இலங்கையில் இடம்பெறும் தேர்தல் தொடர்பிலான அடிப்படைச் சட்டங்கள் அரசியலமைப்பிலேயே உள்ளடக்கப்படுகிறது. அதனடிப்படையில் இலங்கையில் நடைமுறையிலுள்ள தேர்தல்களின் அடிப்படை பண்பாக இருப்பது விகிதாசார பிரிதிநிதித்துவ முறையில் மக்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்தலாகும்

அரசியலமைப்பில் XIII மற்றும் XIV வது உறுப்புரையில் தேர்தல் செயற்பாடுகளுக்கு தேவையான அடிப்படை சட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்கமைய அரசியலமைப்பில் 88 மற்றும் 89 உறுப்புரைக்கு ஏற்ப–

- இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்
- 18 வயது பூர்த்தியடைந்திருத்தல் வேண்டும்
- வாக்கு இடாப்பில் பெயர் பதிவு செய்யப்பட்டிருத்தல்

ஒவ்வொருவரும் ஜனாதிபதியை தெரிவு செய்யும் தேர்தல் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்யும் தேர்தல்களில் வாக்காளாராவதற்கு அல்லது ஏதேனும் மக்கள் கருத்து கணிப்பு வாக்குகளை வழங்குவதற்கு அடிப்படை தகுதி உள்ளவர்களாவர். வாக்களிக்கும் தகுதி இன்மை பற்றியும் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது தொடர்பில் “தேர்தலின் பங்காளர்கள்” எனும் பகுதியில் கலந்துரையாடுவோம்.

அரசியலமைப்பில் நடைமுறையிலுள்ள அடிப்படை தேர்தல் சட்டங்களுக்கு ஏதுவான விதந்துரைகளாக காலத்திற்கு காலம் பாராளுமன்றத்தால் அங்கீகாரம் வழங்கப்படுகின்றது. அதற்கமைய–

1. 1981 இல 15ம் ஜனாதிபதி தேர்தல் சட்டம்
2. 1981 இல பாராளுமன்ற தேர்தல் சட்டம்
3. 1988 இல 15ம் மாகாண சபை தேர்தல் விசாரணை சட்டம்
4. 1946 இல 53ம் உள்ளூராட்சி தேர்தல் விசாரணை கட்டளைச்சட்டம்
5. 1891 இல 7ம் மக்கள் கருத்து கணிப்பு சட்டம்
6. 1980 இல 4ம் வாக்காளர்களை பதிவு செய்யும் சட்டம்

போன்ற சட்டங்கள் அந்தந்த தேர்தலுக்கு ஏற்ப அடிப்படை சட்டமாக செயற்படுத்தப்படும். இந்த அனைத்து தேர்தலையும் நடாத்தும் முழு அதிகாரமும் தேர்தல் ஆணைக்குழுவிற்கே உள்ளது.

இதனடிப்படையில் இலங்கையினுள்

தேர்தல் மற்றும் மக்கள் வாக்கெடுப்புகள் 5 நடைமுறையில் உள்ளது. அதாவது

## பாராளுமன்ற தேர்தல்

5 வருடகால பதவிகளுக்காக 225 பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்யும் பாராளுமன்ற பொதுத்தேர்தல் நடைபெறும்.

இந்த தேர்தல் தொடர்பிலான சட்டமானது 1981 இலக்கம் 1ல் பாராளுமன்ற தேர்தல் அடிப்படை சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இலங்கை தேர்தல் பிரிவில் 22 யை கவனத்திற்கொண்டு விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் 196 உறுப்பினர்களை தெரிவு செய்வதுடன் மேலும் 29 உறுப்பினர்களை தேசிய பட்டியலில் இருந்து தெரிவு செய்வதுடன் அந்தந்த கட்சிகள் இலங்கையில் பெற்றுக்கொண்ட வாக்குகள் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். இந்த தேர்தல் முழு

இலங்கையிலும் நடைபெறும் விதத்தில் ஒரே நாளில் நடைபெறல் வேண்டும்.

தேர்தல் இடம்பெறும் திகதியை தீர்மானிக்கும் அதிகாரம், வேட்பு மனுத்தாக்கள் செய்யும் திகதியை தீர்மானிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உள்ளது.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருந்தால் அடுத்த தேர்தலின் பின்னர் அமைச்சரவையை தெரிவு செய்யும் வரை நடைமுறையிலுள்ள அமைச்சரவை அவ்வாறே செயற்படும்.

# ஜனாதிபதி தேர்தல்

இலங்கை குடியரசின் தலைவரும், நிறைவேற்றுத்துறையின் தலைவரும், அரசாங்கத்தின் தலைவருமான ஜனாதிபதியை 5 வருட பதவிகாலத்திற்காக தெரிவு செய்வது ஜனாதிபதி தேர்தல் ஊடாகவேயாகும். இந்த ஜனாதிபதி தேர்தல் ஒரே நாளில் இலங்கை முழுவதிலும் நடாத்தப்படல் வேண்டும். அதில் வாக்களிக்கப்பட்ட வாக்குகளில் செல்லுபடியாகும் எண்ணிக்கையில் சரி பாதியை விட பெற்றவர் ஜனாதிபதியாக வெற்றிபெறுவார். குறித்த எண்ணிக்கையை எந்தவொரு வேட்பாளரும் பெற்றுக்கொள்ளமுடியாத சந்தர்ப்பத்தில் இரண்டாவது விருப்பு வாக்குகள் கணக்கிடப்படும்.

பொதுவாக 5வருட பதவி காலத்திற்காக ஜனாதிபதியொருவரை நியமிக்கப்படுவதால் ஜனாதிபதி தேர்தலை 5 வருடத்திற்கு ஒருமுறை நடாத்தப்படல் வேண்டுமென்றாலும் அரசியலமைப்பின் கட்டளைக்கு ஏற்ப 4 வருடத்தின் பின்னர் எந்தவொரு சந்தரப்பத்திலும் மீண்டும் ஜனாதிபதி தேர்தலை நடாத்தும் தகுதி அதிகாரத்திலுள்ள ஜனாதிபதிக்கு உண்டு.

தற்போதுள்ள சட்டத்திற்கு ஏற்ப ஒரு நபருக்கு இரண்டு முறையே ஜனாதிபதி பதவியை வகிக்க முடியும்.

அதிகாரத்திலுள்ள ஜனாதிபதி ஒருவர் ஜனாதிபதி பதவிக்காக மீண்டும் போட்டியிடும் சந்தர்ப்பத்தில் அவ்வதிகாரத்தில் இருக்கும் ஜனாதிபதி இரண்டு பாத்திரங்களை ஏற்பார். அதாவது நாட்டின் நிறைவேற்றுத்துறை ஜனாதிபதி, மற்றும் ஜனாதிபதி வேட்பாளாராகவும் ஆகும்.

## மாகாண சபை தேர்தல்

மாகாண சபைகளுகளுக்கு 5 வருடத்திற்கான மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யப்படுவது மாகாண சபை தேர்தல் மூலமாகும். 9 மாகாணங்களுக்காக மாகாண சபை தேர்தல் மூலம் மக்கள் பிரதிநிதிகள் 437 பேர் தெரிவு செய்யப்படுவர். இந்த தேர்தல் ஒவ்வொரு மாகாணங்களுக்காகவும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களில் இடம்பெறும். 5 வருட காலம் நிறைவடைவதற்கு முன் ஆளுநர் ஒருவருக்கு அவ்வாட்சியை கலைக்கும் அதிகாரம் உண்டு. மாகாண சபை தேர்தல் மாகாண சபை கலைக்கப்பட்டதன் பின்னரே நடாத்தப்படும். அதனால் மாகாண சபையின் உறுப்பினர் மற்றும் அமைச்சர்களின் பதவி மற்றும் அதிகாரங்கள் ஆளுநருக்கு பெற்றுக்கொடுக்கப்படும். மாகாண சபை தேர்தல் சட்டத்திற்கு 2017ம் ஆண்டில் இணைத்துக்கொண்ட சீர்திருத்தம் மூலம் தேர்தல் முறையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. அதற்கமைய இதுவரையில் இருந்த விகிதாசார பிரதிநிதித்துவ முறையை மாற்றி வட்டாரம் மற்றும் விகிதாசாரம் எனும் கலப்பு முறையில் உறுப்பினர்களை தேர்வு செய்யும் முறையை அறிமுகப்படுத்தல் மற்றும் 25% பெண் பிரதிநிதித்துவத்தை கட்டாயமாக்குதல் இந்த சீர்திருத்தத்தின் மூலம் இடம் பெற்றுள்ளது.

## உள்ளூராட்சி மன்ற தேர்தல்

பிரதேச சபை, நகர சபை மற்றும் மாநகர சபை எனும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்களை தெரிவு செய்வது உள்ளூராட்சி மன்ற தேர்தல் மூலமேயாகும். உள்ளூராட்சி மன்ற தேர்தல் திகதியை

தீர்மானிப்பது உள்ளூராட்சி மன்ற விடயத்திற்கு பொறுப்பான அமைச்சராகும். இலங்கையில் மிக அதிகமான மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்வது இந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் ஊடாகவேயாகும். இந்த தேர்தல் மூலம் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் 8436 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவர்.

2014 மற்றும் 2017 வருடங்களில் உள்ளூராட்சி மன்ற தேர்தல் கட்டளை சட்டத்திற்கு கொண்டுவரப்பட்ட சீர்திருத்தத்தால் உள்ளூராட்சி மன்ற தேர்தல் முழுமையாக மாற்றமடைந்தது.

அதற்கமைய தற்கால தேர்தல் முறைப்படி ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களுக்காகவும் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் 60% வட்டாரத்தினுள் தெரிவு செய்யப்படுவதுடன் 40% தெரிவுசெய்யப்படுவது விகிதாசார முறைப்படியேயாகும். அதற்கு மாறாக ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களிலும் மொத்த உறுப்பினர்களில் நூற்றுக்கு இருபத்தைந்து வீதம் குறையாத பெண் உறுப்பினர்கள் இருக்க வேண்டுமென்ற விடயமும், உள்ளூராட்சி மன்ற அதிகார பிரதேசங்களில் சேவை செய்யும் அல்லது ஒரு வருடத்திற்கு முன் சேவை செய்துள்ள கள செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு தேர்தல் வேட்பாளராக முன்வருவதை தவிர்த்துள்ளமை இந்த தேர்தல் சட்டத்தில் செய்த விசேட சீர்திருத்தமாகும்.

## வெகுசன வாக்கெடுப்பு

அரசியலமைப்பிற்கு அமைவாக வெகுசன வாக்கெடுப்பு நடாத்துவதற்கு தேவைகள் சில உள்ளன

1. அரசியலமைப்பு சீர்திருத்தமொன்றில் அரசியலமைப்பின் 1,2,3,6,7,8,9,10,11 எனும் உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதந்துரைகளை சீர்திருத்தம் செய்தல் அல்லது அந்த

உறுப்புரைகளில் குறிப்பிட்டுள்ள கருத்துகளுக்கு அனுகூலமற்ற (எதிர்மறையான) சீர்திருத்தங்களின் போது பாராளுமன்ற தேர்தலுக்கு மாறாக 2/3 பெரும்பான்மை வாக்குகளைத் தவிர வெகுசன வாக்கெடுப்புகள் நடாத்தப்படல் வேண்டும்.

2. அரசியலமைப்பில் ஒதுக்கீடுகளுக்கு எதிர்மறையான ஒரு சட்டத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக
3. ஜனாதிபதியின் கருத்திற்கமைய தேசிய முக்கியத்துவம் கொண்ட விடயம் என கவனத்திற்கொள்ளும் கருத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக
4. பாராளுமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட ஒரு சட்ட மூலத்தை (அரசியலமைப்பு சீர்திருத்தமல்லாத) ஜனாதிபதியால் மக்கள் கருத்துகணிப்பிற்காக முன்வைக்கலாம்.

இந்த தேவைகளுக்காக வெகுசன வாக்கெடுப்பு நடாத்த முடியும் என்பதோடு, அது தேர்தல் ஆணைக்குழுவினரால் நடாத்தப்படும். இந்த தேர்தல் இலங்கை முழுவதும் ஒரே நாளில் நடாத்தப்படல் வேண்டும். இது மக்களின் சட்டவாக்க அதிகாரத்தை நேரடியாக செயற்படுத்தும் சந்தர்ப்பமாக குறிப்பிடலாம்.

இலங்கை தேர்தல் வரலாற்றில் வெகுசன வாக்கெடுப்பு ஒரே ஒரு முறைதான் நடைப்பெற்றுள்ளது. அது பாராளுமன்ற தேர்தலை பிற்போடுவதற்கு மக்களின் அனுமதி பெற்றுக்கொள்வதற்காகவேயாகும்.

# IV.

# தேர்தலொன்றின் பங்காளர்கள்

# IV. தேர்தலொன்றின் பங்காளர்கள்

தேர்தல் என்பது ஒரு நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடு அல்ல. அதற்காக முழுநாடும் பல விதத்தில் பங்களிப்பை வழங்கும். இதற்கிடையில் தேர்தலில் பிரதானமாக தொடர்புபடும் பங்காளர்கள் சிலரின் பொறுப்பு மற்றும் தகுதிகள் பற்றி இந்த அத்தியாயத்தில் கலந்துரையாடுவோம்.

## அரசியல் கட்சி

தேர்தல் ஒன்றின்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்களுக்கு மட்டுமே வேட்பாளரை முன்வைக்க முடியும். தேர்தலுக்கு வேட்பாளரை முன்வைப்பதற்கு முன்பே அரசியல் கட்சிகள் தேர்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்துக்கொள்ளப்படல் வேண்டும். அதன்போது கட்சியின் பெயர் மற்றும் சின்னங்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும். அவ்வாறான அரசியல் கட்சிகளை ‘‘ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கட்சி’’ என்று இனங்காண்பர். இதுவரை தேர்தல் ஆணைக்குழுவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 70 அரசியல் கட்சிகள் நடைமுறையில் உள்ளது. தேர்தல் ஒன்றின்போது அரசியல் கட்சிகளால் கடைபிடிக்க வேண்டிய சட்டதிட்டங்கள் தேர்தல் ஆணைக்குழு ஊடாக 2018 ஜனவரி 5ம் திகதி இல 2052/35 அடங்கியுள்ள விசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வேட்பாளர்கள்

தேர்தல் ஒன்றில் வாக்கு கேட்டு நிற்பவர்களே வேட்பாளர் ஆவர். வேட்பாளர்கள் தேர்தலில் முன்னிற்பதற்காக தேர்தல் ஆணைக்குழுவில் பெயர் பதியப்படல் வேண்டும். அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல்

கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்களுக்கு மட்டுமே வேட்பாளர்களை முன்வைக்க முடியும். இவ்வாறு தேர்தலுக்கு முன்வரும் வேட்பாளர்களின் தகுதிகள் தேர்தல்களுக்கு ஏற்ப மாறுபடும். விசேடமாக அரசியலமைப்பு, ஜனாதிபதி தேர்தல் சட்டம், பாராளுமன்ற தேர்தல் சட்டம் மற்றும் உள்ளூராட்சி மன்ற தேர்தல் கட்டளை சட்டம் போன்ற சட்டங்களில் இது தொடர்பில் தெளிவாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக பார்க்கும்போது–

## வேட்பாளர் ஒருவருக்கு இருக்க வேண்டிய தகுதிகள்

- இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்
- 18 வயதை பூர்த்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.(ஜனாதிபதி வேட்பாளருக்கு குறைந்தது 35 வயது)

## வேட்பாளராவதற்கு தகுதியற்றவர்கள்

- இலங்கை பிரஜையாக இல்லாதிருத்தல்
- 18 வயதை பூர்த்தியடையாதவர்கள்
- நீதிமன்ற உத்தியோகத்தர்கள்
- இராணுவ வீரர்கள்
- போலிஸ் உத்தியோகத்தரகள்
- அரச திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள்
- அரச கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்கள்
- புத்தி சுயாதீனமுற்றோர்
- சொத்தற்றவராக அடையாளப்படுத்தப்பட்டவர்.
- 12 மாதங்களுக்கு அதிகமான காலம் சிறைவாசம் அனுபவித்தோர் மற்றும் மரண தண்டனை பெற்று அந்த தண்டனைக்காக சிறைவாசம் செய்யும் நபர்கள்.

- ஏதேனும் ஒரு நீதிமன்றத்தால் தேர்தல் குற்றச்செயல் தொடர்பில் பாராளுமன்ற தேர்தலுக்காக முன்வருவதற்காக அல்லது பாராளுமன்ற ஆசனத்தில் அமர்வதற்கு தகுதியற்றவர் என்று தீர்மானிக்கப்பட்ட நபர்.
- குற்றவியல் குற்றத்திற்காக மூன்று மாதத்திற்கு அதிகமான காலம் சிறைவாசம் செய்தவர் அல்லது அது நிறைவுற்று 5 வருடத்திற்கு மேற்படாதவராக இருப்போர்.
- ஒரு வேட்புமனுக்கு மேலாக பெயரை உட்படுத்தியிருத்தல்.

# வாக்காளர்கள்

தேர்தல் ஒன்றின் முக்கிய பங்களார் வாக்காளர்கள் ஆவர். வாக்காளர் ஒருவர் 18 வயதை பூர்த்தியடைந்தவராக இருக்கவேண்டியதுடன் தேர்தலுக்கு உரிய வருடத்தில் தேர்தல் வாக்காளர் பட்டியலில் தனது பெயர் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

வாக்களிப்பதற்கு தகுதியற்றவர்கள்

- புத்தி சுயாதீனமற்ற நபரென நீதிமன்றத்தால் தீர்மானித்திருத்தல்
- தேர்தல் குற்றச்செயல்களுக்காக குற்றவாளியாகி இருப்பின் குற்றவாளி என்று தீர்மானித்த தினத்திலிருந்து 7 வருடம் காலம் கடக்காமை
- இலஞ்ச ஊழல் சட்டத்தின்கீழ் சட்டவிரோத செயற்பாட்டில் குற்றவாளியாக தீர்ப்பு வழங்கிய நாளிலிருந்து 3 வருடம் காலம் கடக்காமை
- பிரஜா உரிமை இழந்த நபராக அதன் கால வரையரையை கடக்காதவர்.
- தண்டனை சட்டக்கோவையின் கீழ் கடுமையான குற்றத்திற்கு குற்றவாளியாகி குற்றவாளி என்று தீர்மானித்த தினத்திலிருந்து 7 வருடம் காலம் கடக்காமை

- ஜனாதிபதி ஆணைக்குழுவினால் அதனை அவமதித்த குற்றத்திற்கு குற்றவாளி என்று தீர்மானித்த தினத்திலிருந்து 7 வருடம் காலம் கடக்காமை

எனும் கருத்துகள் அடிப்படையில் அவருக்கு அதற்கமைவான தேர்தலில் வாக்களிக்கும் தகுதி அற்றுப்போகும்.

# தேர்தல் ஆணைக்குழு

ஜனாதிபதி தேர்தல், வெகுசன வாக்கெடுப்பு, மாகாண சபை தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்ற தேர்தல்களை நடாத்துவதற்கு அதிகாரம் உள்ளது தேர்தல் ஆணைக்குழுவிற்காகும். ஆணைக்குழுவில் அங்கத்தவர்கள் மூவர் உள்ளதுடன் அவர்கள் அரசியலமைப்பு சபையின் உத்தரவின்படி ஜனாதிபதியால் 5 வருடகாலத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த ஆணைக்குழுவின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் ஆணையாளர் நாயகம் உள்ளடங்கிய தேர்தல் செயலகம் மற்றும் 26 பிரதேச செயலகங்களில் இதற்கு அமைவாக உத்தியோகத்தர்கள் மற்றும் தேர்தல் சேவைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர்களால் தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

# போலிஸ்

தேர்தலின் போது தேர்தல் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள், வேட்பாளர்கள், மற்றும் பொது மக்களின் பாதுகாப்பு பொறுப்பை வழங்கப்படுவது பொலிஸாருக்காகும். தேர்தலில் ஏற்படும் வன்முறைகளை தடுப்பதற்கும் சட்டத்தை செயற்படுத்துவதற்கும் மட்டுமல்லாது அரசியலமைப்பில் 104 (இ) சுட்டிக் காட்டியுள்ள வகையில் தேர்தல் கடமைகளுக்காக தேர்தல் ஆணைக்குழுவின் வேண்டுகோளின்படி பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை பொலிஸ்மா அதிபரால் தேர்தல் ஆணைக்குழுவிற்கு பெற்றுக்கொடுத்தல்

வேண்டும். அவ்வாறு ஆணைக்குழுவிற்கு பெற்றுக்கொடுத்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆணைக்குழுவின் தேவைக்கேற்ப செயற்பட வேண்டுமென்று அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஊடகம்

அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர் தொடர்பில் விளம்பரத்தை பெற்றுக்கொடுப்பது போல தேர்தலோடு தொடர்புடைய தேர்தல் ஆணைக்குழு மற்றும் அரச அறிவிப்புகள் தொடர்பில் மக்களை தெளிவூட்டுவது ஊடகமாகும். தேர்தல் ஒன்றின் தீர்மானம் மட்டுமின்றி சமமான களத்தில் அனைத்து அரசியல் கட்சிகளும் இணைந்து போட்டியிடுவதன் தேவையை உறுதிப்படுத்துவதற்காக வெகுசன ஊடகம் பக்கசார்பின்றி இருத்தல் மிக முக்கியமாகும். எனவே, தேர்தல் ஆணைக்குழுவால் தேர்தல் காலங்களில் ஊடகங்கள் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகளை வர்த்தமானி ஊடாக வெளிப்படுத்தப்படும். அந்த விதிமுறைகளுக்கு அமைய செய்திகளை வெளியிடல் அனைத்து ஊடகங்களினதும் பொறுப்பாகும். இதனால் தேர்தல் காலங்களில் ஊடகங்கள் சமநிலையாகவும் பக்கசார்பின்றியும் செயற்படும் என்பதையே எதிர்பார்க்கப்படுகின்றது.

# அரச உத்தியோகத்தர்கள்

தேர்தல் ஆணைக்குழுவில் தேர்தல் செயற்பாடுகளுக்காக பங்களிப்பு வழங்குபவர்கள் அரச உத்தியோகத்தவர்களாவர். அவ்வாறே தேர்தல் நடைபெறும் சந்தர்ப்பங்களில் அரச சேவைகளை தடையின்றி தாமதமின்றி நடாத்தி செல்லும் பொறுப்பும் அரச உத்தியோகத்தவர்களையே சாரும். விசேடமாக அரச சொத்துகளை தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் இணைத்துக்கொள்ளும் நடவடிக்கைகளை தடைசெய்யும் பொறுப்புகளும் அரச உத்தியோகத்தவர்களுக்கே உள்ளது. இவ் உத்தியோகத்தர்களுக்கு தேர்தல் ஒன்றில் வாக்களிப்பதை தவிர ஏனைய எந்த ஒரு அரசியல்

செயற்பாடுகளில் ஈடுபடுவதையும் சட்ட அடிப்படையில் தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே தேர்தல் காலத்தை அறிவித்ததன் பின்னர் அரச உத்தியோகத்தர்களின் இடம்மாற்றம் செய்வது, பதவி உயர்த்துவது மற்றும் இணைத்துக்கொள்வது போன்ற அனைத்து சேவைகளும் தேர்தல் ஆனைக்குழுவின் அனுமதியுடனேயே இடம்பெறும்.

## சுயாதீன தேர்தல் கண்காணிப்பாளர்கள்

இலங்கையில் எந்தவொரு தேர்தல் சட்டத்திலும் கண்காணிப்பாளர்கள் தொடர்பில் விசேடமாக குறிப்புகள் ஏதும் இல்லை. ஆனால் 1990 தசாப்தங்களிலிருந்து சுதந்திர மற்றும் நியாயமானதுமான தேர்தலை உறுதிப்படுத்தும் செயற்பாட்டிற்காக தேர்தல் கண்காணிப்பாளர்கள் அதிகளவிலான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை குறிப்பிடப்பட்ட தேர்தல் கண்காணிப்பு குழுக்களின் இடையே சுதந்திர மற்றும் நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (பெப்ரல்) மற்றும் தேர்தல் வன்முறை கண்காணிப்பு மத்திய நிலையத்திற்கு (சிஎம்ஈவீ) தேர்தல் நிலையத்திற்குள் இருந்து தேர்தலை கண்காணிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு தேர்தல் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. தேர்தல் கண்காணிப்பில் மேலும் ஒருபடி முன்னேறி 2015ம் வருடத்தில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் இருந்து தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதி பெற்ற கண்காணிப்பு குழுக்களின் அங்கத்தவர்களுக்கு வாக்குகளை எண்ணும் நிலையத்திற்குள் இருந்து தேர்தலை கண்காணிப்பதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த இடத்திலிருந்து கண்காணிப்பு செய்யும் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தமது கண்காணிப்பு அமைப்புகளுக்கு அறிக்கைகளை பெற்றுக் கொடுப்பதுடன் தேர்தல் ஆணைக்குழுவிற்கும் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு கடமைப்பட்டுள்ளது.

இதுவரை 8 தேர்தல் கண்காணிப்பு குழுவினர் செயற்படுகின்றனர்.

# V.

# தேர்தல் ஒன்றின் செயன்முறை

# V. தேர்தல் ஒன்றின் செயன்முறை

இலங்கையில் ஒவ்வொரு தேர்தல்களும் நடைபெறும் முறைகள் தொடர்பில் சரளமான தெளிவை பெற்றுக்கொடுப்பது இந்த அத்தியாயத்தின் நோக்கமாகும். கற்பதற்கு இலகுவாக இருக்கும் என்பதற்காக தேர்தல் நடவடிக்கைகளை 3 பிரிவுகளாக அல்லது சந்தர்ப்பமாக பிரிக்கலாம். அவையாவன–

1. தேர்தலுக்கு முந்திய காலம்
2. தேர்தல் திகதி
3. தேர்தலின் பிந்திய காலம்

## தேர்தலுக்கு முந்திய காலம்

தேர்தல் ஒன்று நடாத்தப்படுவதற்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்ட உடனேயே தேர்தலுக்கு முந்திய காலம் ஆரம்பமாகிறது. தேர்தல் நடைபெறுவதற்கான அறிவிப்புகளை வழங்குவதற்கான அதிகாரம் தேர்தல்களுக்கு ஏற்ப மாறுபடும். அதேபோன்று தேர்தலுக்கு முந்திய காலத்தில் மேலும் முக்கியமானது வேட்பு மனுத்தாக்களுக்கான காலத்தை அறிவிப்பது, வேட்பு மனுத்தாக்கள் செய்வது, தேர்தல் திகதியை குறிப்பிடல் போன்றவையாகும்.

### ஜனாதிபதி தேர்தல்

- **<u>தேர்தல் நடாத்துவதை தீர்மானித்தல் -</u>** அரசியலமைப்பின் 31 (3) உறுப்புரைக்கு அமைவாக ஜனாதிபதி தேர்தல் ஒன்றை நடாத்தப்படல் வேண்டும் என்று தீர்மானிக்கும் பொறுப்பு அதிகாரத்தில் இருக்கும் ஜனாதிபதிக்கே உண்டு. தமது பதவிக்காலம் முடிவடைவதற்கு குறைந்தது ஒன்று அல்லது

இரண்டு மாதத்திற்குள் இந்த ஜனாதிபதி தேர்தல் நடாத்தப்படும் என்று அறிவிப்பு செய்யப்பட வேண்டியதுடன் 31 (3) (அ) உறுப்புரையில் தான் மீண்டும் போட்டியிட தயாராக இருப்பாரெனின் தமது முதலாவது பதவிக்காலம் ஆரம்பித்து நான்கு வருடங்கள் நிறைவடைந்ததன் பின்னர் ஏதேனும் சந்தரப்பத்தில் ஜனாதிபதி தேர்தலை நடாத்துவதற்காள அறிவிப்பை வழங்கலாம் என்று அவ் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- **<u>வேட்பு மனுத்தாக்கல் திகதியை நியமித்தல் –</u>** ஜனாதிபதியை தெரிவு செய்யும் சட்டத்தில் 2வது உறுப்புரைக்கு அமைவாக வேட்பு மனுத்தாக்கல் திகதி மற்றும் இடத்தை தீர்மானிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு உண்டு. வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து 16 மற்றும் 21 தினங்களுக்கிடையில் வேட்பு மனுத்தாக்கல் செய்யப்படல் வேண்டும்.
- **<u>தேர்தல் நடாத்தப்படும் திகதியை நியமித்தல் –</u>** ஜனாதிபதி தேர்தல் சட்டம் 2 (ஆ) உறுப்புரைக்கு அமைவாக தேர்தல் திகதியை அறிவிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு உண்டு. அதற்கமைய வேட்பு மனுத்தாக்கல் செய்த தினத்திலிருந்து நான்கு அல்லது ஐந்து வாரங்களுக்கிடையில் ஒரு திகதியை தேர்தல் தினமாக தீர்மானிக்க முடியும்.

## பாராளுமன்ற தேர்தல்

பாராளுமன்ற தேர்தல் ஒன்றை நடாத்துவதற்கு நடைமுறையிலுள்ள பாராளுமன்றத்திற்கு 5 வருட காலம் நிறைவடைந்திருத்தல் வேண்டும். இல்லையெனில் ஜனாதிபதியால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஜனாதிபதியால் பாராளுமன்ற அரசியலமைப்பின் 70 வது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று 2 சந்தர்ப்பங்களில் கலைக்க முடியும். அவையாவன –

1. முதலாவது பாராளுமன்ற கூட்டத்திலிருந்து நான்கரை வருடங்கள் கடந்ததன் பின் தமது எண்ணக்கருத்தை முன்வைத்து செய்யும் அறிவிப்பு ஊடாக.
2. பாராளுமன்றத்திற்கு வருகை தராத உறுப்பினர்கள் உள்ளடங்களாக மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையில் 2/3 ன் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்ட பாராளுமன்றத்தை கலைப்பதற்கான பரிந்துரைக்கு அமைவாக ஜனாதிபதியால் மேற்கொள்ளப்படும் அறிவிப்பு ஊடாக.

இந்த இரண்டில் முறைகளில் எந்த முறையிலாவது அல்லது பாராளுமன்றத்தை கலைக்கப்படும் எனும் அறிவித்தல் மூலம் கீழ்வரும் அறிவிப்புகள் 70 (5) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவையாவன –

- புதிய பாராளுமன்றம் ஒன்றுகூடும் திகதி – இத்தினம் பாராளுமன்றம் கலைத்த தினத்திலிருந்து மூன்று மாதத்திற்கு மேற்படாத தினமாக இருத்தல் வேண்டும.

அவ்வாறே பாராளுமன்ற தேர்தல் சட்டம் 10வது உறுப்புரையில் ஜனாதிபதியால் பாராளுமன்றம் களைக்கப்படும் அறிவிப்புடன் கீழ்வரும் அறிவிப்பையும் செய்தல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

- வேட்பு மனுத்தாக்களின் காலவரையறை – கலைக்கப்படும் என்று அறிவித்த தினத்திலிருந்து 19வது நாள் தொடக்கம் பின்வரும் 17வது நாள் மத்தியானத்தில் நிறைவடைந்திருத்தல் வேண்டும்
- தேர்தல் நடாத்தப்படும் தினம் – வேட்பு மனுத்தாக்கல் காலவரையறை நிறைவடைந்ததன் பின் நான்கு அல்லது ஐந்து வாரங்களுக்கு இடையிலான காலத்தின் திகதியை தீர்மானிக்க வேண்டும்.

## மாகாண சபை தேர்தல்

மாகாண சபை தேர்தல் ஒன்றை நடாத்துவதற்கு மாகாண சபை ஒன்றின் ஐந்து வருட காலம் நிறைவடைந்திருத்தல் அல்லது அரசியலமைப்பில் 154 (ஆ) (8) (இ) யாப்பிற்கு அமைவாக ஆளுனரால் மாகாண சபை கலைக்கப்படும் என்று அறிவிப்பு செய்யப்படல் வேண்டும்.

**தேர்தல் நடாத்தப்படும் எனும் அறிவிப்பை செய்தல் –** மாகாண சபையை கலைத்து 4 வாரங்களுக்குள் தேர்தல் ஆணைக்குழுவால் குறித்த மாகாண சபை தேர்தல் நடாத்தப்படும் என்பதை அறிவிக்க வேண்டும். (2017 சீர்திருத்தம்)

**வேட்பு மனுத்தாக்கள் திகதியை தீர்மானித்தல் –** குறிப்பிட்ட மாவட்டத்திற்கான வேட்பு மனுத்தாக்கல் காலத்தை அறிவிக்கும் பொறுப்பு மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகாரிக்கு உள்ளதென மாகாண சபை தேர்தல் சட்டம் 10வது உறுப்பரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்காக தேர்தல் ஆணைக்குழுவால் தேர்தல் நடைபெறும் எனும் அறிவிப்பு செய்த தினத்திலிருந்து 14வது நாள் தொடக்கம் 21வது நாள் மத்தியானம் 12 மணிவரையுள்ள காலத்துடனான அறிவிப்பும் பெயர் பட்டியலையும் தமது செயலகத்தில் பிரசுரித்தல் வேண்டும்.

**தேர்தல் தினத்தை அறிவித்தல் –** மாகாண சபை தேர்தல் சட்டம் 22 (1) உறுப்புரைக்கு அமைவாக மாகாண சபை தேர்தல் நடாத்தப்படும் திகதியை அறிவிக்கும் பொறுப்பு மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிக்கு உள்ளது. வேட்பு மனுத்தாக்கல் நிறைவடைந்ததன் பின் ஐந்து அல்லது ஏழு வாரங்களுக்கிடையில் வரும் சனிக்கிழமை நாளொன்றில் தேர்தல் நடாத்தப்படல் வேண்டுமென்று சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிவிப்பிற்கமைய மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியால் வர்த்தமானியில் பிரசுரித்தல் வேண்டும்.

## உள்ளூராட்சி மன்ற தேர்தல்

உள்ளூராட்சி மன்ற தேர்தல் ஆரம்பமாவது குறிப்பிட்ட உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் ஆரம்பித்த நாள் விடயத்திற்கு பொருப்பான அமைச்சரினால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னராகும். (உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்டம் 25 உறுப்புரை) அதன் பதவிக்காலம் தொடங்குவதற்கு 6 மாத கால வரையறைக்குள் தேர்தல் நடாத்தப்படல் வேண்டும்.

**<u>வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்கான காலவரையறை பற்றிய அறிவித்தல்</u>** _ உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு ஏற்ப வேட்பு மனுத்தாக்கள் காலவரையறை தொடர்பான அறிவிக்கும் பொறுப்பு மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிக்கு உள்ளது என்று உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்டம் 26வது உறுப்பரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவரால் அறிவிப்பு செய்த தினத்திலிருந்து 14 – 17 காலவரையறைக்கிடையில் இதற்கான காலத்தை குறிப்பிட வேண்டுமென்று மேலும் இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>தேர்தல் தினம் தொடர்பான அறிவிப்பு –</u>** உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான தினத்தை அறிவிக்கும் பொறுப்பு மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகாரிக்கு உள்ளது என்று சட்டம் 38 வது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய அது தொடர்பில் அவர் அறிவிப்பு செய்யவேண்டியதுடன், அதில்

- தேர்தல் நடாத்தப்படும் திகதி (அறிவிப்பு செய்த தினத்திலிருந்து 5-7 வாரங்களுக்கிடையிலான ஒருநாள்)
- போட்டியிடும் அரசியல் கட்சிகள் / சுயாதீன குழுக்கள் மற்றும் தேர்தல் இலட்சினைகள்
- தேர்தல் மத்திய நிலையங்கள் ஆகியன குறிப்பிடல் வேண்டும்

அதற்கமைய தேர்தலுக்கு முந்திய காலத்தில் இடம்பெறும் முக்கிய சம்பவங்களானது தேர்தல் இடம்பெறும் என்பதை வெளியிடல், மனுத்தாக்கல் செய்தல், தேர்தல் தினத்தை குறிப்பிடல்.

அதற்கமைய தேர்தலுக்கு முந்திய காலத்தில் வாக்காளர்களுக்கு தெரியவரும் முக்கிய அறிகுறியானது தேர்தல் பிரசார நடவடிக்கைகள் இடம்பெறுவதாகும். (தேர்தல் பிரசாரம் தொடர்பான பந்தியில் இது தொடர்பான விரிவான விபரங்கள் பெற்றுக்கொடுக்கப்படும்.)

அதே போன்று தேர்தலுக்கு முந்திய செயற்பாடாக இல்லையெனினும் அக்காலத்தில் இடம்பெறும் முக்கிய செயற்பாடானது தபால் வாக்கு பதிவு செய்தலாகும். தபாலில் வாக்களிப்பதற்காக தபால் வாக்காளர் என்று விண்ணப்பிக்க வேண்டும். தபால் வாக்காளராக விண்ணப்பிக்கும் உரிமை தேர்தல் கடமையில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர்கள், பொலிஸ் மற்றும் ஆயுதப்படை அங்கத்தவர்கள் மற்றும் அரச போக்குவரத்து சேவையில் ஈடுபடும் ஊழியர்களுக்கு மட்டுமே உள்ளது.

# தேர்தல் தினம்

தேர்தல் தினத்தில் குறிப்பிட்ட தேர்தல் நிலையங்களில் தேர்தலை முற்பகல் 7 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை நடாத்தப்படல் வேண்டும். தேர்தல் நடைபெறும் தினத்தில் இடம்பெறும் சட்ட திட்டங்கள் சிலவற்றை கலந்துரையாடுவோம்.

## தேர்தல் நிலையத்திற்கு உட்பிரவேசிக்க கூடிய அதிகாரமுள்ள நபர்கள்

- வாக்காளர்கள்
- வாக்களிப்பு நிலையத்தின் அதிகாரிகள்
- அதிகாரமுள்ள வாக்களிப்பு நிலையத்தின் பிரதிநிதிகள்
- நடமாடும் தேர்தல் அதிகாரி (உதவி தெரிவத்தாட்சி அதிகாரிகாரி)

- வேட்பாளர் (ஒருமுறைக்கு ஒருவர் மட்டுமே)
- போட்டியிடும் அரசியல் கட்சி செயலாளர் அல்லது அதிகாரமுள்ள பிரதிநிதி
- அனுமதி பெற்ற தேர்தல் கண்காணிப்பாளர்கள்

## வாக்களிப்பு நிலையங்களில் காட்சிப்படுத்த வேண்டிய அறிவிப்புகள்

அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் நிலைய பொருப்பதிகாரியால் கீழ்வருபவற்றை காட்சிப்படுத்தல் வேண்டும்.

- வாக்களிக்கும் முறை பற்றிய வாக்காளருக்கு ஆலோசனை வழங்கும் அறிவிப்புகள் .
- ஒவ்வொரு வேட்பாளர்களின் பெயர் மற்றும் அவர்களுக்கான சின்னங்கள் உள்ளடங்கிய அறிவிப்பு.
- அதிகாரமுள்ள வாக்களிப்பு நிலைய அதிகாரிகளுக்கு ஸ்டிக்கர் ஒட்டுவதற்கு இடமளித்தல் வேண்டும்.

## தேர்தல் தொடங்குவதற்கு முன் நிலைய பொறுப்பதிகாரிக்கான செயற்பாடுகள்

- தேர்தல் கையேடு, உத்தியோகபூர்வ முத்திரை, உத்தியோகபூர்வ சின்னங்கள், வாக்காளர்களின் பெயர் பட்டியலை வாக்களிப்பு நிலையத்திற்கு வரும்போது காட்டப்படல் வேண்டும்.
- வாக்கு பெட்டிகள் வெறுமையானவையாக காட்டப்படல் வேண்டும்.
- வாக்கு பெட்டியில் முத்திரை பதித்தல்.

## வாக்கு சீட்டை வாக்காளருக்கு கையளிக்கும் நடவடிக்கைகள்.

- வாக்காளர் பெயர் பட்டியலில் பின்புறத்தில் குறிப்பிட்டுள்ளதுபோன்று வாக்காளரின் பெயர் மற்றும் இலக்கத்தை உரத்து வாசித்தல் வேண்டும்.
- வாக்காளரின் தனித்துவத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
- வாக்காளரின் வலது கை சிறுவிரலில் குறித்த மையை பூசுதல்.
- வாக்காளரின் இலக்கம் வாக்கு சீட்டை புத்தகத்தின் உப அட்டையில் குறித்து வாக்கு சீட்டை கிழித்து அகற்றுதல் வேண்டும்.
- வாக்கு சீட்டில் உத்தியோபூர்வ முத்திரை வைத்தல் வேண்டும் (அழுத்துதல் அல்லது துளைப்படுத்தல்).
- வாக்காளருக்கு வாக்கு சீட்டு வழங்கப்பட்டது என்பதை காட்டுவதற்காக பெயர் பட்டியலில் குறிப்பிட வேண்டும். (இதில் வாக்கு சீட்டின் இலக்கத்தை வழங்கக் கூடாது)
- வாக்கு சீட்டையை வாக்காளருக்கு வழங்க வேண்டும்

## வாக்கெடுப்பு நிறைவடைந்த பின்னரான செயற்பாடுகள்.

நிலையத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தரின் முன்னிலையில் வாக்கு பெட்டியை மூடி தமது இலட்சினையால் அடையாளப்படுத்தப்பட்டு மூட வேண்டியதுடன் உத்தியோகத்தர்களுக்கு தேவையெனின் தனது இலட்சினையை வைப்பதற்கு சந்தர்ப்பத்தை பெற்றுக்கொடுத்தல் வேண்டும். அதேபோன்று தேர்தல் அதிகாரியின் அறிக்கையை தயார் செய்வதுடன் தேர்தல் நடைபெற்ற முறை தொடர்பாக அரசியல் கட்சிகளின், வாக்களிப்பு நிலையத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள், சுயாதீன தேர்தல் கண்காணிப்பாளர்களின் அறிக்கையை பெற்றுக்கொள்வதும் சிரேஷ்ட வாக்களிப்பு அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும். அந்த அனைத்து செயற்பாடுகளின்

இறுதியில் வாக்கு பெட்டியை வாக்குகளை எண்ணும் மத்திய நிலையத்திற்கு கொண்டு சென்று வாக்ககுளை எண்ணும் அதிகாரிகளிடம் வாக்கு பெட்டிகளையும் அறிக்கையையும் ஒப்படைத்தல் வேண்டும்.

# தேர்தலுக்கு பிந்திய காலம்

தேர்தல் நடைபெற்று முடிவடைந்ததன் பின்னர் இடம்பெறும் முக்கியமான நிகழ்வாக கருதப்படுவது வாக்குகளை எண்ணும் பணியாகும். அது இடம்பெற்று முடிந்தவுடன் தேர்தல் ஆணைக்குழுவினரால் வாக்கு முடிவுகள் வெளியிடப்படும். இந்த முடிவுகள் பின்னர் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும்.

தேர்தல் இடம்பெற்ற முறை மற்றும் வாக்கு எண்ணும் பணிகளில் சட்ட ரீதியிலான சிக்கல்கள் ஏதும் இருக்கும் வேட்பாளர்களுக்கு குறித்த அரசியல் கட்சிக்கு அல்லது சுயாதீன குழுவிற்கு அந்த தேர்தல் முடிவுகளுக்கு எதிராக தேர்தல் பெட்டிசன் ஒன்றினை முன்வைப்பதற்கான சலுகைகள் அனைத்து தேர்தல் சட்டத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் வாக்குகளை மீண்டும் எண்ணுதல் மட்டுமன்றி தேர்தலை மீண்டும் நடாத்துவதற்கான உத்தரவை வழங்குவதற்கான அதிகாரமும் நீதிமன்றத்திற்கு உள்ளது.

## ஆணைக்குழுவினரால் தேர்தல் நிலையமொன்றை இரத்து செய்யக்கூடிய சந்தர்ப்பங்கள்

- குறித்த தேர்தல் நிலையத்தில் குறித்த நேரத்தில் வாக்களிக்கும் சந்தர்ப்பத்தை வழங்க முடியாமை
- வாக்களிக்கும் சந்தரப்பங்களை குறிக்கப்பட்டுள்ள காலம் வரை தொடர்ந்து நடைமுறைப்படுத்த முடியாமை

- தேர்தல் நிலைய பொருப்பாளரின் கட்டுப்பாட்டிலிருந்து ஏதேனும் ஒரு காரணத்தால் இந்த வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்புகள் தடைபடல்.
- வாக்களிக்கும்போது தடைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் தேர்தல் நிலைய பொருப்பதிகாரி ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்டோருக்கு அச்சுறுத்தல் செய்தல், கொலை செய்தல் அல்லது வாக்களிப்பு நிலையத்தில் இருந்து வெளியேற்றல்.
- பாதைகளில் சில தடைகள் இருப்பதால் தேர்தல் அதிகாரிகளுக்கு வாக்களிப்பு நிலையத்திற்கு செல்லமுடியாமை
- வாக்களிப்பு நிலையத்தில் சமாதானத்தை சீர்குழைக்கும் ஏதேனும் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதால் வாக்களிக்க வசதி வாய்ப்புகள் இல்லாதிருத்தல்.
- யாராவது ஒரு நபர் பலவந்தமாக வாக்கு சீட்டை வாக்கு பெட்டிக்குள் போடுதல்.
- ஏதாவது ஒரு வாக்களிப்பு நிலையத்தில் சுதந்திரமானதும், நியாயமானதும் மற்றும் இரகசியமாக வாக்களிப்பதற்கான சூழ்நிலை இல்லாமை.

இவ்வாறான சம்பவங்கள் வாக்களிப்பு நிலையங்களில் இடம்பெற்றால் அது தொடர்பாக வாக்களிப்பு நிலையத்தின் சிரேஷ்ட தேர்தல் அதிகாரியினால் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிப்பதுடன் ஆனைக்குழுவினரால் மட்டும் விசாரணை மேற்கொண்டு குறிப்பிட்ட வாக்களிப்பு நிலையத்தின் தேர்தலை இரத்து செய்யமுடியும்.

இவ்வாறு இரத்து செய்யும் செயற்பாட்டிற்காக கவனத்திற்கொள்ளவேண்டிய வேறு பல விடங்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

- சிரேஷ்ட வாக்களிப்பு நிலைய அதிகாரியின் அறிக்கை
- நடமாடும் உதவி தெரிவத்தாட்சி அதிகாரிகாரியின் அறிக்கை
- வாக்களிப்பு நிலையத்தின் பாதுகாப்பிற்கு பொருப்பான அதிகாரியின் அறிக்கை
- நடமாடும் பொலிஸ் அதிகாரியின் அறிக்கை
- சுயாதீன தேர்தல் கண்காணிப்பாளர்களின் அறிக்கை

# VI.

# தேர்தல் பிரசாரம்

# VI. தேர்தல் பிரசாரம்

தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் இடம்பெற்றதன் பின்னர் அனைத்து வேட்பாளர்களும் தமது வெற்றிக்காக பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவர். அதில் தனது கட்சியின் சின்னம், இலக்கம் மற்றும் தமது புகைப்படங்களை மக்கள் மனதில் பதிவு செய்து வைத்துக்கொள்ள தேவையான அனைத்து செயல்களிலும் ஈடுபடுபடுவதற்கு வேட்பாளர்கள் நடவடிக்கை மேற்கொள்வர். அதற்காக நடைமுறையிலுள்ள பிரசார செயற்பாடுகள் தொடர்பிலான சட்டதிட்டங்கள் ஜனாதிபதி தேர்தல் சட்டம், பாராளுமன்ற தேர்தல் சட்டம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சட்டங்களுக்கிடையில் பல மாற்றங்கள் காணக்கூடியதாக இருப்பதுடன் பொதுவாக தேர்தல் பிரசாரங்கள் தொடர்பில் கீழ்வரும் சட்டங்களில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது

## சுவரொட்டி பிரசாரம் மற்றும் கையேடுகள்

வேட்பு மனுத்தாக்கல் செய்த தினத்திலிருந்து தேர்தல் தினத்திற்கு மறுநாள் வரை சுவரொட்டி பிரசாரம் மற்றும் கையேடு விளம்பரப்படுத்தக்கூடிய இடங்களாவன –

1. வேட்பாளர் பயணிக்கும் வாகனம் (வேட்பாளர் வாகனத்தில் இருக்கும்போது)
2. தேர்தல் பிரசார கூட்டம் நடைபெறும் இடம்
3. அறிவிக்கப்பட்ட தேர்தல் பிரசார அலுவலக சூழல்

அதேபோன்று வேட்பாளர் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படும் வாகனத்தை தவிர வேறு ஏதேனும் பொது அல்லது தனிப்பட்ட எந்த இடத்திலும் வேட்பாளரை தெரிவு செய்து கொள்தற்கான வாய்ப்புகளை

அதிகரித்துக்கொள்ளும் எதிர்பார்ப்பில் விளம்பரப்படுத்தும் கொடி அல்லது பதாதைகளை விளம்பரப்படுத்துதலும் தடைசெய்யப்பட்டுள்ளது.

## செய்தித்தாள்களில் பொய்யான அறிக்கைகளை வெளியிடல்

தேர்தலில் போட்டியிட்ட ஒரு வேட்பாளரின் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அவரின் வார்த்தைகள் அல்லது செயற்பாடுகள் தொடர்பில் தவறான செய்தி பத்திரிகையிலோ அல்லது வாராந்த வெளியீடுகளிலோ பிரசுரிப்பது குற்றமாகும்.

## ஊர்வலங்கள் நடாத்துதல்

தேர்தலுக்கு வேட்பு மனுத்தாக்கள் செய்த தினத்திலிருந்து தேர்தல் தினத்திற்கு மறுநாளை தொடர்ந்து அடுத்து வரும் நாட்களில் மே தின ஊர்வலம்,கலாச்சார மற்றும் மதசார்பான ஊர்வலங்களை தவிர அரசியல் பிரசார நடவடிக்கைகளுக்காக ஊர்வலம் செல்வது தடைசெய்யபட்டுள்ளது. குறிப்பிட்ட ஊர்வலங்களை ஒருங்கமைத்தல், செயற்படுத்தல் மற்றும் அந்த ஊர்வலத்தில் அங்கத்தவராக பங்குபற்றுவதும் குற்றமாகும்.

## மத ஸ்தலங்களில் தேர்தல் பிரசாரம் மேற்கொள்ளல்

தேர்தலில் ஈடுபட்டுள்ள அரசியல் கட்சி அல்லது சுயாதீன குழுவை தெரிவு செய்துகொள்வதற்கான உந்துதளிக்கும் செயற்பாட்டிற்கு மத ஸ்தலங்களில் பொது /ட்டங்களை நடாத்துவது அல்லது நடாத்துவதற்கு ஊக்குவித்தல் குற்றமாகும்.

# தேர்தல் பிரசார அலுவலகம்

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக பிரசார அலுவலகம் நிறுவுவதற்காக மாவட்ட தேர்தல் அலுவலகத்தின் முறையான அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு பெற்றுக்கொண்ட தேர்தல் பிரசார அலுவலகம் அறிவிக்கப்பட்ட பிரசார அலுவலகமாக குறிப்பிடப்படும்

அதற்கமைய அனைத்து கட்சிகள் அல்லது சுயாதீன குழுக்களுக்கான தேர்தல் அதிகார பிரதேசத்திற்குள் ஒரு ஊடக பிரசார அலுவலகத்தை அமைத்துக்கொள்ள அனுமதி உண்டு. இதனை தவிர வேட்பாளர் வாழும் சொந்த வீட்டில் ஒரு அலுவலகத்தை நடாத்திச் செல்லலாம். இந்த அலுவலகத்தினுள் வேட்பாளர் அல்லது அரசியல் கட்சியின் பதாதைகள் (கட்டவுட்) போன்ற பிரசார செயற்பாடுகளில் ஈடுபடலாம்.

தேர்தல் தினத்திற்கு 48 மணித்தியாலத்திற்கு முன் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை நிறைவு செய்வதுடன் அக்காலத்தினுள் ஒரே ஒரு பிரசார மத்திய நிலையமும் வேட்பாளரின் வீட்டு அலுவலகமும் மட்டுமே பிரசார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த முடியும்.

# தேர்தல் பிரசார கூட்டங்கள்

தேர்தல் பிரசார கூட்டங்கள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவின் சில விதிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய தேர்தல் பிரசார கூட்டம் நடைபெறும் இடத்தில் அலங்காரங்கள் அந்த கூட்டம் ஆரம்பமாவதற்கு 18 மணித்தியாலயத்திற்குள் நடைமுறைப்படுத்த வேண்டும். கூட்டம் நடைபெறும் இடத்திலிருந்து 250 மீற்றருக்குள்ளேயே அலங்காரங்கள் செய்தல் வேண்டும்.

கூட்டம் நடாத்துதுல் மற்றும் ஒலிபெருக்கி இயந்திர பாவனைகள் தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் அனுமதியை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

## வீட்டுக்கு வீடு சென்று மேற்கொள்ளப்படும் தேர்தல் பிரசாரம்

வீட்டுக்கு வீடு சென்று செய்யும் தேர்தல் பிரசாரம் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவினர் சில விதிமுறைகளை குறிப்பிட்டுள்ளனர். அதற்கமைய அதுபோன்ற பிரசார குழுக்களுக்களில் கலந்துக்கொள்ள கூடியவர்களின் அதிகபட்சமான எண்ணிக்கையை தேர்தல் ஆணைக்குழுவால் அந்தந்த தேர்தல் தொகுதிகளின் அரசியல் கட்சியின் நிரந்தர பிரதிநிதிக் குழு மற்றும் பொலிஸாருடன் கலந்துரையாடி தீர்மானம் மேற்கொள்வதுடன், அது பற்றிய பிரசாரமும் பெற்றுக்கொடுக்கபடும். அத்தோடு அங்கே இசைக்குழு, இசை கருவிகள் அல்லது ஒளிபரப்பு இயந்திரங்களை இணைத்துக்கொள்ள முடியாது.

## தேர்தல் பிரசார நடவடிக்கைகள் பற்றிய மேற் பார்வை

தேர்தல் ஒன்றில் பிரசார நடவடிக்கைகள் தொடர்பில் பாதுகாப்புடன் இருப்பதும், சட்டரீதியிலான பிரசார நடவடிக்கைகளை தடையின்றி மேற்கொள்ள தேவையான பாதுகாப்பை வழங்குதல் மற்றும் சட்ட விரோத பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக வழக்கு தொடருதல் மற்றும் பிரசாரத்திற்காக பயன்படுத்திய பொருட்களை அகற்றுதல் போன்றவைகளுக்கு சட்டபூர்வமான அங்கீகாரம் பொலிஸ் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்காக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருத்தல் கட்டாய தேவையல்ல. அவ்வாறான

சட்ட விரோத செயற்பாடு தொடர்பாக தெரியவந்தால் அவைகளை அகற்றவும் தடுக்கவும் பொறுப்பு உள்ளது.

## ஊடக வழிகாட்டல்கள்

தேர்தல்கள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு அறிவித்த நாள் முதல் தேர்தல் நடைபெறும் காலங்களினுள் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் நடுநிலையாகவும் சமநிலையாகவும் செயற்பட வேண்டிய விதம் பற்றி வழங்கும் அதிகாரம் அரசியலமைப்பு 104 (அ) யாப்பின் ஊடாக தேர்தல் ஆணைக்குழுவிற்கே வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய தேர்தல் ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் ஊடக வழிகாட்டல்கள் வர்த்தமானியில் பிரசுரித்தல் வேண்டும்.

## அரச சொத்துகளை தேர்தல் பிரசாரங்களுக்கு பயன்படுத்திக் கொள்வதை தடுத்தல்

தேர்தல் நடைபெறும் காலங்களில் அரசிற்கோ அல்லது ஏதேனும் அரச திணைக்களத்திற்கு சொந்தமான அசையும் மற்றும் அசையாத சொத்துகள் –

1. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் அல்லது அரசியல் கட்சிகள் அல்லது சுயாதீன குழுக்களை தெரிவு செய்துகொள்ளல், ஊக்குவித்தல் அல்லது தடை செய்வதற்காக பயன்படுத்தல்
2. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் அல்லது அரசியல் கட்சிகள் அல்லது சுயாதீன குழுக்களால் பயன்படுத்துவதை தடை செய்யும் அதிகாரம் அரசியலமைப்பு 104 (ஆ) (4) யாப்பின் ஊடாக தேர்தல் ஆணைக்குழுவிற்கே வழங்கப்பட்டுள்ளது

அவ்வதிகாரத்தை உபயோகித்து தேர்தல் ஆணைக்குழுவினால் தேர்தல் ஒன்றை அறிவித்ததன் பின்னர் விசேட வர்த்தமானி மூலம் “தேர்தல் காலவரையறைக்குள் அரசிற்கோ அல்லது ஏதேனும் அரச

திணைக்களத்திற்கு சொந்தமான அசையும் மற்றும் அசையாத சொத்துகளை கட்சிகள், குழுக்கள் மற்றும் வேட்பாளர்களின் மேம்பாட்டிற்கோ அல்லது பிரச்சினைகளுக்கு உட்படும் விதத்திலும் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடாத்துவதற்கு தடைகள் ஏற்படும் விதத்திலும் பயன்படுத்திக்கொள்வதை தடுப்பதற்கான கட்டளைகள்'' அமுலாக்கப்பட்டுள்ளது.

இந்த கட்டளைகளை மீறுவதால் குற்றவாளியாகும் ஒருவருக்கு ஒரு இலட்சம் வரையான தண்டப்பணமும் ஐந்து வருடம் சிறை தண்டனையும் வழங்க முடியும்.

# வரையறுத்த அரசியல் உரிமைகளுக்கான உத்தியோகத்தர்கள் தேர்தல் பிரசார கடமைகளில் ஈடுபடல்

தாபனக் கோவை ஓஓஓஜஜ அத்தியாயத்திற்கு அமைவாக தலைமை வகுப்பு உத்தியோகத்தர்களுக்கு வாக்களிக்கும் உரிமையை தவிர கூட்டங்களுக்கு பங்குபற்றல் மற்றும் எந்தவொரு வேட்பாளருக்கோ கட்சிக்கோ பிரசார நடவடிக்கை செயற்பாடுகளில் ஈடுபடுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று சமாதான உத்தியோகத்தர்கள் ,ஆயுத படையினர், மற்றும் தேர்தல் ஆணைக்குழு உத்தியோகத்தர்கள் இந்த வரையறுக்கப்பட்ட வாக்களிக்கும் உரிமைகளுடனான பிரிவைச் சார்ந்தவர்களாவர். அவ்வாறான ஒருவர் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் குற்றமாகும்.

# VII.

# அதிகமாக இடம்பெறும் தேர்தல் சட்ட மீறல்கள்

# VII. அதிகமாக இடம்பெறும் தேர்தல் சட்ட மீறல்கள்

அனைத்து தேர்தல்களிலும் அதிகமாக இடம்பெறும் தேர்தல் சட்ட மீறல்கள் சிலவற்றை தெளிவாக இனங்கண்டு கொள்ளலாம்.

## சுவரொட்டி / பதாதைகள் காட்சிப்படுத்தல்

தேர்தல் சின்னம், இலக்கம், வேட்பாளரின் உருவத்துடனான தேர்தல் சுவரொட்டிகளை தேர்தல் பிரசார அழுவலகத்தில், வேட்பாளர் பயணிக்கும் வாகனத்தில், தேர்தல் கூட்டம் நடாத்தப்படும் இடங்களில் அல்லது வேட்பாளரின் வீட்டை தவிர்த்து வேறு இடங்களில் காட்சிப்படுத்துவது தேர்தல் சட்ட மீறலாகும்.

## அனுமதியற்ற ஒலிபெருக்கி பாவனை

தேர்தல் காலங்களில் அதிகமாக இடம்பெறும் ஒரு சட்ட மீறலாகும். அநேகமாக வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்கு ஒலிபெருக்கி இயந்திரங்களை வாகனங்களில் இணைத்துக்கொண்டு கிராம புரங்களில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவர். அனுமதியற்ற ஒலிபெருக்கி இயந்திரபாவனை செய்தால் பொலிஸாருக்கு கைது செய்யும் அதிகாரம் உண்டு.

## அரச சொத்துகளை பிரசார நடவடிக்கைகளுக்காக இணைத்துக் கொள்ளல்

அரச சொத்து மற்றும் அரச அதிகாரிகள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவது தேர்தல் சட்டத்தை மீறுவதுடன் பொது சொத்துக்களை இவ்விடயத்திற்காக பயன்படுத்தும் குற்றங்கள்

தொடர்பிலான சட்டத்தின்கீழ் குற்றமாகும். தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக அரச வாகனம், கட்டிடங்கள் மட்டுமல்லாது அதிகாரிகளை பயன்படுத்திக்கொள்வதும் இதன் அடிப்படையில் குற்றமாகும்.

## அரச அலுவலக வளாகத்தில் நடைபெறும் பிரசார நடவடிக்கைகள்

அரச அலுவலக வளாகத்தை தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக உபயோகிப்பது முழுமையாக தடைசெய்யப்பட்டுள்ளது. ஆனால் சில அரசியல் கட்சி ஆதரவாளர்கள் அரச அலுவலக வளாகத்தில் கையேடுகளை பகிர்ந்தளித்தல் மற்றும் சிறு கூட்டங்களை (ீழஉ மநவ அநநவபைெ) நடாத்துவதுடன் பதாதைகளையும் காட்சிப்படுத்துகின்றனர்.

## அனுமதியற்ற பிரசார அலுவலகங்கள்

தேர்தல் பிரசார அலுவலகங்களை நடாத்தி செல்வதற்காக மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் அனுமதி பெற்றுக்கொள்ளல் வேண்டும். அவ்வாறு அனுமதி பெற்றுக்கொடுக்கும் தேர்தல் பிரசார அழுவலகங்கள் தொடர்பில் தரம் மற்றும் நிபந்தனைகள் தேர்தல் ஆணைக்குழுவால் வழங்கப்படும். அலுவலக வளாகத்தினுள் அனுமதி பத்திரத்தை காட்சிப்படுத்தல் வேண்டும். அவ்வாறு அனுமதி பெற்றுக்கொள்ளாத அலுவலகம் தேவையற்ற பிரசார அலுவலகமாகும். அவ்வாறான அலுவலகங்களை அகற்றுவதற்கு பொலிஸ் மற்றும் தேர்தல் ஆணைக்குழு அதிகாரிகளுக்கு அதிகாரம் உண்டு.

## மக்கள் ஊர்வலம் / வாகன ஊர்வலம்

வேட்புமனுத்தாக்கள் செய்ததன் பின்னர் மற்றும் தேர்தல் முடிவுகளை வெளியிடும் சந்தர்ப்பம் வரையான காலங்களில் மத மற்றும்

கலாச்சாரத்தை முன்னிலைப்படுத்திய ஊர்வலங்கள் மட்டுமல்லாது வேறு ஊர்வலங்கள், பேரணிகள் தடைசெய்யப்பட்டுள்ளது. அவ்வாறான கட்சி அல்லது வேட்பாளரை ஊக்குவிப்பதற்கான அல்லது எதிர்ப்பை காட்டும் ஊர்வலம் அல்லது வாகன ஊர்வலங்கள் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

## வாக்குகளை பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் பொருட்களை பகிர்ந்தளித்தல்

தேர்தல் காலங்களில் இடம்பெறும் தீவிரமான தேர்தல் சட்ட மீறல்களில் இதுவும் ஒன்றாகும். தேர்தல் சட்டங்களுக்கு அமைய வாக்குகளை பெற்றுக்கொள்வதற்கும் அல்லது வேறு வேட்பாளருக்கு வாக்களிப்பதை தவிர்பதற்காகவும் இலஞ்சம் வழங்குவது குற்றமாகும். அதே போன்று இலஞ்சம் பெறுவதும் குற்றமாகும்.

## தேர்தல் தினத்தில் தடைசெய்யப்பட்டுள்ள செயற்பாடுகள்.

தேர்தல் இடம்பெறும் வாக்களிப்பு நிலையத்தினுள் அல்லது வாக்களிப்பு நுழைவாயில் இருந்து ஒன்றரை கிலோமீற்றர் தூரத்திற்குள்

1. வாக்குகளை கேட்டல்
2. ஏதேனும் ஒரு கட்சிக்கு வாக்களிக்க வேண்டாமென்று வாக்காளரை ஊக்குவித்தல்
3. தேர்தல் பிரசார துண்டு பிரசுரங்களை பகிரந்தளித்தல் அல்லது வேறு பிரசார நடவடிக்கைகள் ஈடுபடுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு வாக்களிப்பு நிலையத்தின் நுழைவாயிலுக்கு அருகில் ஏதேனும் பொது அல்லது தனியார் இடங்களில் ஒலிபெருக்கி இயந்திரங்களை செயற்படுத்துவதுடன் வாக்களிப்பு நிலைய

அதிகாரிகளுக்கு அல்லது வாக்காளர்களுக்கு தடை ஏற்படும் வகையில் செயற்படுவது குற்றமாகும்.

அவ்வாறு வாக்களிப்பு நிலையத்தின் நுழைவாயிலுக்கு அருகிலும் வாக்களிப்பு நிலையத்திலும் முறைகேடான விதத்தில் செயற்படுவதும் குற்றமாகும்.

## ஊழல்

- உயிருடன் வாழும் அல்லது இறந்தவர் அல்லது போலி மனிதன் அல்லது வேறு ஒரு நபராக முன்னின்று வாக்களித்தல்
- தனது பெயரில் அல்லது பெயர்களின் கீழ் தேர்தலில் பல முறை வாக்களித்தல்
- தனக்கு வாக்களிப்பதற்காக அல்லது மற்றொருவருக்கு வாக்களிப்பதை தடுப்பதற்காக முறைகேடான வகையில் ஏதேனும் உபசரனைகள் செய்தல் அல்லது பெற்றுக்கொள்ளுதல்.
- ஏதேனும் மத கூட்டங்களில் வாக்காளர் ஒருவர் கட்சிக்கோ அல்லது ஒரு குழுவிற்கோ வாக்களிக்க அல்லது வாக்களிக்காமல் இருப்பதற்கு ஊக்குவித்தல்.
- வாக்களித்தல் அல்லது வாக்களிக்காதிருப்பதால் மத அமைப்புகளில் இருந்து விலக்கப்படுவதாக அச்சுறுத்துதல்.
- ஒரு வேட்பாளருக்கு வாக்களிப்பது அல்லது வாக்களிக்காதிருப்பதால் சேவையில் இருந்து விலக்கப்படுவீர் அல்லது ஏதேனும் சலுகைகள் அல்லது சேவையிலிருந்து இடைநிறுத்தப்படுவீர்களென்று சேவை வழங்குனரால் ஊழியர்களை அச்சுருத்துதல்
- வாக்களிப்பது அல்லது வாக்களிக்காதிருப்பதற்காக இலஞ்சம் வழங்குதல்.

# வாக்கு சீட்டு தொடர்பான குற்றங்கள்

- வாக்குகள்
- வாக்காளர் சீட்டுகள் அல்லது உத்தியோகபூர்வ சின்னத்தை திரிபுப்படுத்தல்
- அதிகாரமின்றி வாக்காளர் சீட்டை ஒருவருக்கு வழங்குதல்
- வாக்காளர் சீட்டை பணம் கொடுத்து வாங்குதல் அல்லது விற்றல்.
- உத்தியோகபூர்வமான வாக்காளர் சீட்டுகளை தன்னகத்தே வைத்துக்கொள்ளல்.
- வாக்களித்த வாக்காளர் சீட்டை வாக்களிப்பு நிலையத்தினுள் காட்சிப்படுத்துதல்.
- வாக்காளர் சீட்டு அல்லாத வேறு பொருளொன்றை வாக்கு பெட்டியினுள் போடுவது
- வாக்காளர் சீட்டு ஒன்றை அதிகாரமின்றி வாக்களிக்கும் நிலையத்தில் இருந்து வெளியே கொண்டுச் செல்லல்.
- வாக்கு பெட்டி அல்லது முத்திரை இடப்பட்ட வாக்கு சீட்டை உத்தியோகபூர்வமான அதிகாரமின்றி திறத்தல் அல்லது அழித்தல்.
- வாக்காளர் சீட்டுகளை அதிகாரமின்றி அச்சடித்தல்.
- சட்டத்திற்கு அமைவாக தன்னால் வாக்களிக்க முடியாது என்று தெரிந்து கொண்டும் வாக்களிப்பதற்கு தான் தகுதியற்றவன் என்று தெரிந்துக்கொண்டும் வாக்களிப்பது.

# தேர்தல் சட்ட மீறல்களின் போது முறைப்பாடு செய்யக்கூடிய நிறுவனங்கள்

- **தேர்தல் ஆணைக்குழு** – பிரதான அலுவலகம் மற்றும் சம்பவத்திற்கு பொருப்பான மாவட்ட அலுவலகம் (தொடர்பு பின்வரும் பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது).

- **இலங்கை பொலிஸ்** – பொலிஸ் நிலையத்தின் பிரதான தேர்தல் பணியகம் மற்றும் பொலிஸ் பிரிவு மட்டங்களில் செயற்படும் தேர்தல் செயற்பாட்டு நிலையங்கள் போன்று 119 அவசர அழைப்பிற்கும் முறைப்பாடு செய்ய முடியும்.

- **இலங்கை மனித உரிமை ஆணைக்குழு** – 1996 இலக்கத்திற்கு அழைத்து முறைப்பாடு செய்யலாம்.

- **சுயாதீன தேர்தல் கண்காணிப்பாளர்கள்** – (தொடர்பு கீழ்வரும் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது).

# VIII.

# சுதந்திரமானதும் நியாயமானதுமான ஓர் தேர்தலுக்காக பிரஜைகளின் பாத்திரம்

# VIII. சுதந்திரமானதும் நியாாயமானதுமான ஓர் தேர்தலுக்காக பிரஜைகளின் பாத்திரம்

சுதந்திரமானதும் நியாாயமானதும் தேர்தலுக்காக பிரஜைகளுக்கு பாரிய பொறுப்புகள் உள்ளது. அதன் பொறுப்புகளை நிறைவேற்றிக்கொள்வதற்கான ஏழு செயற்பாடுகள் கீழே பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## தெளிவடைதல்

தேர்தல் செயற்பாடுகளில் பிரஜைகள் பங்களிப்பதற்கு பிரதான சிக்கலாக இருப்பது நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் தெளிவின்மையாகும். பிரஜையாக தனது உரிமை என்ன வாக்காளராக பதிவு செய்வதன் முக்கியத்துவம் மற்றும் அதன் செயற்பாடுகள் பற்றியும் வேட்பாளர்களின் தகுதிகள் மற்றும் தகுதி இன்மை பற்றியும் தேர்தல் சட்டங்களை மீறுதல் என்றால் என்ன என்பதையும் பிரஜைகள் தெளிவடைந்திருந்தால் அநேகமான குற்றச்செயல்களை தடுக்க முடியும்.

## அறிவூட்டல்

தான் அறிந்து கொண்டதை தனது குடும்பம் மற்றும் அயலவர்களுக்கு அறிவூட்டுவது மிக முக்கியமாகும். அதன் மூலம் தேர்தல் செயற்பாடுகள் தொடர்பில் அறிவை பெற்றுக்கொண்ட ஒரு சமூகம் உருவாவதுடன் அதன் மூலம் ஜனநாயக உரிமையை பாதுகாக்கும் செயற்பாடுகளை மேலும் வழுவாக பயன்படுத்த முடியும்.

## விழிப்பாக இருத்தல்

தேர்தல் செயற்பாடுகள் தொடர்பில் விழிப்போடு இருப்பது பிரஜைகளின் கடமையாகும். தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாடுகள், அரசின் செயற்பாடுகள் போன்று ஒரு அரசியல் கட்சி செயற்பாட்டாளர்களின் செயற்பாடுகள் தொடர்பில் விழிப்போடு இருத்தல் அவசியமாகும். தனக்கு தெரிந்ததை வைத்து அரசியல் கட்சி செயற்பாட்டாளர்களின் செயற்பாடுகள் சட்டதிற்குட்பட்டதா இல்லையா என்பது தொடர்பில் கண்காணிப்புடன் இருத்தல் வேண்டும். விசேடமாக ஏதேனும் செயற்பாடுகளால் தனக்கு அல்லது அயலவர்களுக்கு உரிமைகள் மீறப்படுகின்றதா, இல்லையெனில் ஏதேனும் ஒரு செயற்பாட்டால் சுதந்திரம் மற்றும் நியாயமான தேர்தலுக்கு பாதகம் ஏற்படுகின்றதா என்று கண்காணிப்புடன் இருத்தல் சேண்டும்.

## எதிர்த்தல்

தேர்தல் முறைக்கு விரோத செயற்பாடு மற்றும் சட்டவிரோத செயல்களுக்கு அனுமதி வழங்காமை போன்று அச்செயற்பாடுகளுக்கு தனது முழுமையான எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும்.

## அறிக்கைகளை வைத்துக்கொள்ளல்

சட்ட விரோத செயற்பாடுகள் அல்லது சுதந்திரம் மற்றும் நியாயமான தேர்தலுக்கு பாதகம் ஏற்படும் செயற்பாடுகள் இடம்பெறும் சந்தர்ப்பங்களை அறிந்தவுடன் அல்லது கண்டவுடன் அது தொடர்பில் உரிய அறிக்கையை பெற்றுக்கொள்வது முக்கியமாகும். விசேட விதமாக தனது குறிப்பு புத்தகத்தில், கையடக்க தொலைபேசியில் காணொலியை பதிவு செய்தல் அல்லது புகைப்படத்தை பதிவு செய்துகொள்வதன் ஊடாக ஏதேனும் செயற்பாடு தொடர்பான அறிக்கையை வைத்துக்கொள்ள முடியும்.

## முறைப்பாடு செய்தல்

தேர்தல் சட்ட மீறல்கள் இடம்பெறும் போது அது தொடர்பில் அமைதியாக இருக்காமல் முறைப்பாடு செய்வது சிறந்த பிரஜை ஒருவரின் கடமையாகும். இது தொடர்பில் பொலிஸாருக்கு, தேர்தல் அதிகாரிகளுக்கு அல்லது சுயாதீன தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு முறைப்பாடு செய்தல் வேண்டும். இம்முறைப்பாடு அறிக்கைகளின் பிரதிகளை தம்வசம் வைத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்வது முக்கியமாகும்.

## ஒருங்கிணைதல்

சுதந்திரம் மற்றும் நியாயமான தேர்தலுக்கு மட்டுமல்லாது திடமான பிரஜைக்காக ஒருங்கிணைதல் மிக முக்கியமாகும். தனியாக செயற்படுவதைவிட ஒருங்கிணைந்து செயற்படுவதால் சிறந்த பெறுபேறை பெற்றுக்கொள்ள முடியும். அதே போன்று தனது பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படும். இதற்காக நடைமுறையிலுள்ள ஜனநாயக நிறுவனங்களுடன் ஒருங்கிணைதல்இ அல்லது தனது குழுவுடன் ஒருங்கிணைதல், அல்லது சுயாதீன தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்களுடன் ஒருங்கிணைதல் இடம்பெறக்கூடும்.

# IX.

# சிறந்த வேட்பாளரை தெரிவு செய்வது எவ்வாறு

# IX. சிறந்த வேட்பாளரை தெரிவு செய்வது எவ்வாறு?

தேர்தல் ஒன்றின் போது சரியான அரசியல் கட்சி அல்லது சுயாதீன குழுவை தெரிவு செய்தல் போன்றே சரியான வேட்பாளரை தெரிவு செய்வதும் மிக முக்கியமானதும் தீர்மானமிக்கதுமாகும். கட்சி மற்றும் சுயாதீன குழுக்களின் கொள்கைகள் போன்று வேட்பாளரின் தூர நோக்கு, திறமை மற்றும் நம்பகத்தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்வது முக்கியமானதாகும்.

விசேடமாக வேட்பாளரை தெரிவு செய்யும்போது அவ்வமைப்பின் செயற்பாடுகள் தொடர்பில் செயற்படுவதற்கு அவ்வேட்பாளருக்கு திறமை உள்ளதா என்பதை கவனத்திற்கொள்ளல் வேண்டும். பாராளுமன்ற தேர்தலின்போது தான் வாக்களிக்கும் வேட்பாளருக்கு பாராளுமன்ற செயற்பாடுகளுக்கு அதாவது நாட்டின் கொள்கை உருவாக்கம், சட்ட உருவாக்கம் மற்றும் நிதி கட்டுப்பாட்டை செயற்படுத்தும் திறன் உள்ளதா என்று கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

மாகாண சபை பிரதிநிதியாக தெரிவு செய்யும் நபரை மாகாண சபை நடவடிக்கைகள் மாகாண சபை கட்டளைச் சட்டங்கள் உருவாக்கம் மற்றும் மாகாண அபிவிருத்தி தொடர்பான தூரநோக்கு மற்றும் திறமை உள்ளதா என்று கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

உள்ளூராட்சி மன்றத்திற்கு தெரிவு செய்யும் பிரதிநிதி அந்த குறிப்பிட்ட உள்ளூராட்சி பிரிவின் தேவைகள் பற்றியும் உள்ளூராட்சி மன்ற கட்டமைப்பு மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் அனுபவம் மற்றும் தூர நோக்கு போன்றவற்றுடன் அந்த உள்ளூராட்சி மன்ற அதிகார பிரதேசத்தில் சிறந்த தொடர்புகளை உடையவராக இருத்தல் வேண்டும்.

தவறான பிரதிநிதிக்கு வாக்களிப்பதன் மூலம் அவரை தெரிவு செய்யும் நிறுவனத்திற்கு (பாராளுமன்றம் / மாகாண சபை / உள்ளூராட்சி மன்றம்)பாரிய அநீதியை ஏற்படுத்துவதுடன் அதன்மூலம் முழு சமூகத்திற்கும் பாரிய தீமையையும் ஜனநாயகத்தின் ஆரோக்கியத்திற்கும் பாதிப்பு ஏற்படுகிறது.

## கட்சியினால் தகுதியான வேட்பாளர்களுக்கு பெயர் மனுத்தாக்களை பெற்றுக்கொடுத்தல்

வேட்பாளர்களுக்கான பெயர் மனுத்தாக்களை பெற்றுக்கொடுப்பது அரசியல் கட்சிகள் என்பதால் அரசியல் கட்சிகளின் தீர்மானம் மிக முக்கியமாகும். தேர்தலுக்காக பெயர் மனுத்தாக்கள் பெற்றுக்கொடுக்கும்போது அரசியல் கட்சிகளால் பின்பற்றவேண்டிய பொது தேர்வளவு(சுற்றிகள்) 8 மார்ச் 12 அமைப்பினால் 2015 வருடத்தில் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அதற்காக அனைத்து அரசியல் கட்சிகளினதும் ஒப்பந்தம் கிடைக்கப்பெற்றுள்ளது.

அத் தேர்வளவுகள்(சுற்றிகள்) –

- குற்றவியல் குற்றச்செயலுக்காக சிறை தண்டனை அனுபவித்த அல்லது இடைநிறுத்தப்பட்ட சிறை தண்டனைக்கு உட்பட்டவராக இருத்தல் கூடாது.
- இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பில் குற்றவாளியாக இல்லாத சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாத்திரமாக இருத்தல். அதேபோன்று இலஞ்சம் அல்லது ஊழல் குற்றவாளிகள் தொடர்பில் விசாரணை செய்தல் வேண்டும்.
- மதுபானம், போதைவஸ்து, சூதாட்டம், கெஸினோ, விபச்சார விடுதிகள் உள்ளடங்கிய நாட்டின் நல்லாட்சிக்கு கேடுவிளைவிக்கும் அமைப்புகளை நடாத்தி செல்பவர்கள் அல்லது

கடந்த காலங்களில் இத்தவறுகளை செய்யாதவராக இருத்தல் வேண்டும்.

- உயிரியல் ஆதார கட்டமைப்பை அழிக்கும் அல்லது சூழலுக்கு தீமையளிக்கும் வர்த்தகங்களில் இருந்த அல்லது இருப்பவராக இல்லாதிருத்தல் வேண்டும்.
- அரசியல் அதிகாரத்தை முறையற்ற விதத்திலும் சட்டவிரோதமாகவும் பாவிக்காதவராக இருத்தல் வேண்டும்.
- பொது மக்களின் பிரதிநிதியாவதற்கு முன் நாட்டிற்கு தீமை ஏற்படுத்தும் நிதி ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொண்ட மற்றும் மக்கள் பிரதிநிதியாக இருந்து தனது அரசியல் அதிகாரத்தை சட்டவிரோதமாக பாவித்து அரசுடனான நிதி ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொண்டவரோ அல்லது ஒப்பந்தத்தின் பங்காளராக இல்லாதிருத்தல் வேண்டும்.
- பெயர் மனுத்தாக்கள் பெற்றுக்கொடுக்கும் வேட்பாளர் தான் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதேசத்தில் வதிவாளராகவோ அல்லது அம்மக்களுடன் சிறந்த தொடர்பினை கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- பெயர் மனுத்தாக்களை பெற்றுக்கொடுக்கும்போது பெண்கள் மற்றும் இளைஞர் பிரதிநிதித்துவத்திற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக்கொடுக்க செயற்படல் வேண்டும்.

## அரசியல் கட்சிகளுக்கு ஏற்படுத்தக்கூடிய அழுத்தங்கள்

மேற்குறிப்பிட்ட பொது அளவுகோல்களை அரசியல் கட்சிகள் தொண்டராகவே பின்பற்றுவார்கள் என்று அனுமானிப்பது தவறாகும் . அதனால் அரசியல் கட்சிகளுக்கு அழுத்தத்தை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறான அழுத்தங்கள் சில –

- தகுதியான வேட்பாளர்களுக்கு மட்டும் வேட்பு மனுத்தாக்களை பெற்றுக்கொடுப்பதற்கு கட்சிகளுக்கு அழுத்தத்தை ஏற்படுத்தல்
- தனது கட்சியில் தகுதியானவர்களை தெரிவு செய்யவில்லையெனில் தகுதியான வேட்பாளரை தெரிவு செய்துள்ள அரசியல் கட்சிக்கோ அல்லது சுயாதீன குழுவிற்கோ தனது வாக்குகளை பெற்றுக்கொடுப்பதாக தனது பிரதேச அரசியல் தலைவர்களுக்கு அறிவித்தல்.
- ஊழல் செய்த நபர்கள் வேட்பு மனுத்தாக்கள் செய்வதை எதிர்த்தல்
- தனது கிராமத்திற்கு சேவை செய்யக்கூடிய திறமையான நேர்மையானவர்களை கட்சி பேதமின்றி பட்டியலிடல்
- பெண்கள் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதால் நல்ல பெருபேறுகளை பெற்றுக்கொள்வதற்காக திறமையான, ஆக்கபூர்வமான, நேர்மையான பெண்கள் பட்டியலை உள்வாங்குவதற்காக தமது தலைவர்களுக்கு அழுத்தம் கொடுத்தல்.
- மரண உதவி சங்கம், இளைஞர் சங்கம் போன்ற கிராமங்களில் செயற்படும் அனைத்து சமூக அமைப்புகளையும் எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஈடுபடுத்த கதையுங்கள். கட்சி நிறம் பார்க்காது தகுதியானவர்களை மட்டும் உங்கள் கிராமத்தின் தலைமைத்துவத்திற்கு தெரிவு செய்தல்.
- புதிய அரசியல் கலாச்சாரத்தை கட்டியெழுப்புவதற்காக பொறுப்புகளுடனான பிரஜை என்ற வகையில் செய்யக்கூடிய அதிகளவிலான பங்களிப்பை வழங்குதல்.
- இளைஞர் பிரதிநிதித்துவத்திற்காக சந்தர்ப்பம் வழங்குமாறு அழுத்தத்தை ஏற்படுத்தல்.

# சமுகத்தினுள் சிறந்த வேட்பாளர் தொடர்பிலான கலந்துரையாடலை ஏற்படுத்தல்

- அரசியல் கட்சி மற்றும் அனைத்து வேட்பாளர்களுக்காகவும் பொது மேடை அமைத்து அதில் அனைத்து கட்சிகள் மற்றும் அந்த பிரதேசத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் அரசியல் கொள்கைகளை வெளியிடுவதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக்கொடுப்பதுடன் அப்பிரதேச மக்களின் தேவைகள் மற்றும் அபிலாஷைகள் தொடர்பாக அந்த வேட்பாளர்களை கூறுணுர்வுபடுத்துதல் மற்றும் அது தொடர்பில் அவர்களின் பதிலை பெற்றுக்கொள்ளல்
- வேட்பாளர்களிடம் பிரதேசத்தின் தேவைகள் பற்றி அறிவூட்டி பொது பிரச்சினைகள் தொடர்பாக பகிரங்கமாக உறுதிமொழிகளை பெற்றுக்கொள்ளல்.
- வேட்பாளராகளிடம் தான் ஊழலின்றி அரசியலில் ஈடுபடுவதாக தெளிவான ஒப்புதல்களை பெற்றுக்கொள்ளல்.

தேர்தலுக்கு முன்வந்துள்ள வேட்பாளர்களுக்கு புள்ளியிடுதல்.

தேர்தல் தினத்தில் தான் வாக்களிப்பது யாருக்கு என்பது தொடர்பில் நியாயமான வகையில் தீர்மானிப்பதற்காக மார்ச் 12 அமைப்பினால் அறிமுகப்படுத்தியுள்ள ‘‘உங்கள் வாக்கிற்கு பெறுமதியை பெற்றுக்கொடு – வாக்களிப்பதற்கு முன் ‘‘வேட்பாளருக்கு புள்ளி வழங்குவோம்’’ எனும் புள்ளி வழங்கும் அட்டவனை ஊடாக செய்துக்கொள்ள முடியும்.

## “உங்கள் வாக்கிற்கு பெறுமதியை பெற்றுக்கொடு – வாக்களிப்பதற்கு முன் “வேட்பாளருக்கு புள்ளி வழங்குவோம்”

**පිරිසිදු දේශපාලනයක් සඳහා - මාර්තු 12 ව්‍යාපාරය**

மார்ச் 12 இயக்கம் - சிறந்ததோர் அரசியலுக்காக

**March 12 Movement - for clean politics**

**புதிய உள்ளூரதிகார சபைத் தேர்தல் முறையுடன்**
**புதிய அரசியல் கலாசாரமொன்றைக் கட்டியெழுப்புவோம்**

அன்பார்ந்த பிரசைகளே!
நீங்கள் இம்முறை உங்கள் கிராமத்திற்கு உங்களுக்கே உரிய பிரதிநிதியைத் தெரிவுசெய்யும் தேர்தலில் பங்கெடுக்க உள்ளீர்கள். இந்த தேர்தலில் நீங்கள் எடுக்கும் முடிவின்படி உங்கள் கிராமம் மற்றும் நகரத்தின் எதிர்காலம் தீர்மானிக்கப்படும். ஆகவே, பெறுமதியான உங்கள் வாக்கினை அளிப்பதற்கு முன்னர் உங்கள் பிரதிநிதியை சரியாக இனங்கண்டு கொள்ளுங்கள்.

உள்ளூரதிகார சபை: ..............................................................................

வட்டாரம்: ..............................................................................................

**செயலாளர் காரியாலயம்**
**மார்ச் 12 இயக்கம்**
இல.16
பேர்ட் பிலேஸ்,
பாமன்கட வீதி,
கொழும்பு 06.

011 2 558 570/1 - 011 2 558 574
011 2 558 572
march12movement@gmail.com
www.cleanpolitics.lk

**உங்கள் வாக்கிற்கு பெறுமதியை பெற்றுத் தருவோம். - வாக்களிக்க முன் வேட்பாளர்களுக்கு புள்ளிகள் வழங்குவோம்.**

| அரசியல் கட்சி / சுயேச்சைக் குழு | உங்கள் வட்டாரத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் | நியாயமான முறையில் பணம் சம்பாதிப்பவர் | அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தாதவர் | இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளாகாதவர் | உங்களால் இலகுவாக சந்திக்கக் கூடிய நெருக்கமான ஒருவர் | சுற்றாடலுக்கு தீங்கு ஏற்படுத்தாதவர் | சமூக சேவையாற்ற சிறந்தவர் | சகல இன, மத மற்றும் கலாசாரங்களை மதிப்பவர் | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

நியதி ஒவ்வொன்றிற்குமேற்ற வேட்பாளருக்கு புள்ளி வழங்கும் முறை

| | |
|---|---|
| மிக நன்று | 08 – 10 |
| நன்று | 05 – 07 |
| சாதாரணம் | 02 – 04 |
| பலவீனம் | 00 – 02 |

ஒவ்வொரு வேட்பாளருக்கும் உரித்தான மொத்தப் புள்ளிகளை கணித்து மிகப் பொருத்தமான வேட்பாளரைத் தெரிவு செய்யுங்கள

**சாதுரியமாக வாக்களிப்போம். உங்கள் உள்ளூர் அதிகார சபைக்குத் தகுதியானவர்களை மட்டும் தெரிவு செய்வோம்.**

**மார்ச்சு 12 இயக்கத்தின் செய்தி**

**தனிப்பட்ட பாவனைக்கு மட்டும். பூர்த்தி செய்த அட்டைகளை கைமாற்ற வேண்டாம்!**

அதேபோன்று தேர்தலின் பின்னர் இடைக்கிடையே மக்கள் பிரதிநிதிகளுடன் பொது கலந்துரையாடல்களை ஏற்படுத்துவது மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் செயற்பாடுகள் தொடர்பில் பொதுவாக கேள்வி எழுப்புவதற்காக பொது மேடை அமைத்து கொடுப்பதன் ஊடாக சிறந்த வேட்பாளரை பெற்றுக்கொள்வதற்காக பிரஜைகளால் மேற்கொள்ளக்கூடிய திடமான பங்களிப்பாகும்.

# X.

# தேர்தல் காலங்களில் நிதமும் உபயோகிக்கும் சொற்பதங்கள்

# X. தேர்தல் காலங்களில் நிதமும் உபயோகிக்கும் சொற்பதங்கள்

## தேர்தல் நடைபெறும் காலவரையறை (Period of an Election)

தேர்தல் ஒன்று நடைபெறுதல் பற்றிய அறிவிக்கும் ˙ அல்லது தீர்மானிக்கும் நாளில் இருந்து ஆரம்பித்து அந்த தேர்தல் முடிவுகள் வெளியிடும் தினம் வரையான காலமாகும். (அரசியலமைப்பு 104 ஏ யாப்பு)

## தேர்தல் ஆணைக்குழு (Election Commission)

தேர்தலை நடாத்துதலோடு தொடர்புடைய அனைத்து செயற்பாடுகளையும் வழிநடாத்துவதற்காக அரசியலமைப்பின் 17 வது சீர்திருத்தத்தின் கீழ் இந்த ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ளது. அரசியலமைப்பு சபையின் பரிந்துரைக்கு அமைவாக ஜனாதிபதியால் தெரிவு செய்யப்பட்ட மூன்று அங்கத்தவர்கள் இந்த ஆணைக்குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். இந்த ஆணையாளர்கள் ஐந்து வருடகாலம் பதவியில் இருக்கலாம்.

## உதவி தேர்தல் ஆணையாளர் (Assistant Commissioner of Elections)

தேர்தல் ஆணைக்குழுவின் மாவட்ட பிரதிநிதி இந்த பெயரில் இனங்காணப்படுவார். அனைத்து மாவட்டங்களிலும் உதவி தேர்தல் ஆணையாளர் அலுவலகம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் தேர்தல்

திணைக்களத்தின் செயற்பாடுகளை அந்தந்த மாவட்டங்களில் நடைமுறைப்படுத்துவதே உதவி தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தின் கடமையாகும்.

## மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி (RO)

தேர்தல் ஒன்றின் வேட்பு மனுத்தாக்களை பெற்றுக்கொள்ளல், வாக்குகளை எண்ணுவது தொடர்பில் மாவட்டத்தில் இருக்கும் பிரதானமானவர் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியாக இனங்காண்பர். இந்த பதவி நிரந்தர பதவியாக இல்லாதிருப்பதுடன் தேர்தல் ஒன்றை வர்த்தமானியில் வெளியிட்டதன் பின்னர் தேர்தல் ஆணைக்குழுவினரால் அந்த மாவட்டத்திற்கான தெரிவத்தாட்சி அதிகாரியை வர்த்தமானியில் பிரசுரிப்பது ஊடாக தெரிவு செய்வர். இவர் தேர்தல் நடைபெறும் காலங்களில் தேர்தல் ஆணையாளரின் பிரதிநிதியாக செயற்படுவார். எப்பொழுதும் இந்த பதவிக்காக தேர்தல் ஆணைக்குழுவினரால் தெரிவு செய்யப்படுவது அந்த மாவட்டத்தின் மாவட்ட செயலாளரையாகும்.

## உதவி மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி (ARO)

தெரிவத்தாட்சி அதிகாரிகளின் உதவி உத்தியோகத்தர்களாக செயற்படுவதற்கு மாவட்ட உதவி தெரிவத்தாட்சி அதிகாரிகள் சிலரை தெரிவு செய்வர். தேர்தல் தினத்தில் நடமாடும் பணியில் ஈடுபட்டு தேர்தல் நடவடிக்கையில் மேற்பார்வைகள் மற்றும் வாக்கு எண்ணும் பணியின் மேற்பார்வை செய்வதே இவர்களின் பிரதான செயலாகும்.

## சிரேஸ்ட தலைமை தாங்கும் அலுவலர் (SPO)

வாக்களிப்பு நிலையத்தில் இருக்கும் உயர் அதிகாரியை இப்பெயரில் அறிமுகப்படுத்தலாம். வாக்களிப்பு நிலையத்தினுள் மட்டுமல்லாது அதை மையப்படுத்திய 500 மீற்றர் வரையறைக்குள் அவரின் ஆலோசனைக்கு

அமைய வழிநடத்தும் அதிகாரம் அவருடையது. வாக்களிப்பு நிலையத்தினுள் இறுதி தீர்மானத்தை மேற்கொள்ளும் அதிகாரி இவர்.

## கனிஸ்ட தலைமை தாங்கும் அலுவலர் (JPO)

வாக்களிப்பு நிலைய உயர் அதிகாரியின் உதவி அதிகாரி இவராவர். வாக்களிப்பு நிலைய உயர் அதிகாரிக்கு பதிலாக செயற்படுவதுடன் அவருக்கு உதவி செய்வது இவரின் பொறுப்பாகும்.

## வாக்களிப்பு நிலைய முகவர் (Polling Agent)

தேர்தலுக்கு முன்வந்துள்ள அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்களால் தமது வேட்பாளரின் உரிமைக்காக தேர்தல் முறையாக இடம்பெறுகிறதா என்பதை கண்காணிப்பதற்காக வாக்களிப்பு நிலையத்தின் பிரதிநிதிகளை தெரிவு செய்பவர். ஒரு வாக்களிப்பு நிலையத்திற்கு ஒரு கட்சிக்கு அல்லது சுயாதீன குழுவிற்கு இரண்டு பிரதிநிதிகளை தெரிவு செய்யமுடியும்.

## உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை (Official Poll Card)

தேர்தல் நடாத்தப்படும் திகதி, வாக்களிப்பு நிலைய இலக்கம், வாக்களிப்பு நிலையம் இருக்கும் இடம் மற்றும் வாக்காளர்களின் சின்னங்கள், இலக்கம் போன்ற தகவல் அடங்கியவற்றை தெரிவத்தாட்சி அதிகாரியால் அனைத்து பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களுக்கும் தபால் மூலம் பெற்றுக்கொடுக்கும் இதனை உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை என குறிப்பிடுவர். இதனுடன் வேட்பாளர் பட்டியலும் வழங்கப்படும்.

## வாக்குச்சீட்டு (Ballot Paper)

வாக்காளருக்கு தமது வாக்கு மற்றும் விருப்பை குறியிடுவதற்கு வாக்களிப்பு நிலையத்தில் தேர்தல் அதிகாரிகளால் வழங்கப்படுவது இந்த வாக்கு சீட்டாகும். இந்த வாக்கு சீட்டை வாக்களிப்பு நிலையத்தினுள் குறித்து வாக்கு பெட்டியினுள் போட வேண்டும்.பிரதான வாக்கு சீட்டுடன் இணை சீட்டும் இருப்பதுடன் அனைத்து வாக்கு சீட்டிலும் குறியீட்டு இலக்கம் காணக்கூடியதாக இருக்கும்.

## கேட்டுப்பெறும் வாக்கு சீட்டு (Tendered Ballot Paper)

வாக்காளர் வாக்களிப்பதற்கு வரும்போது அவருக்குரிய வாக்கை வேறு ஒரு நபர் உபயோகித்திருந்தால் வாக்களிப்பு நிலையத்தினுள் ஏற்படும் அமைதியின்மையை கட்டுப்படுத்துவதற்காக வழங்கப்படும் நீல நிறத்தை உடைய வாக்காளர் சீட்டை கேட்டுப்பெறும் வாக்கு சீட்டு என குறிப்பிடுவர்.

இந்த வாக்காளர் சீட்டு நிறத்தை தவிர ஏனைய அனைத்து வகையிலும் வாக்காளர் சீட்டுக்கு சமமானதாக இருப்பதுடன் வாக்கு எண்ணும்போது இந்த வாக்கு சீட்டு எண்ணப்படப்பட மாட்டாது.

## வாக்காளர் பெயர் பட்டியல் (Register of Electors)

வாக்காளரை பதிவு செய்யும் சட்டத்தின்கீழ் தயாரிக்கப்படும் பட்டியல் தேர்தல் வாக்காளர் பெயர் பட்டியல் என்று குறிப்பிடப்படும். வருடாந்தம் தேர்தல் வாக்காளர் பெயர் பட்டியல் சீர்திருத்தம் செய்யப்படுவதுடன் அது கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் நடைபெறும். அதில் தேர்தல் வாக்காளர் பெயர் பட்டியலில் பெயர் உள்ளடக்கப்படும் வாக்காளருக்கு மட்டும் அந்த தேர்தல் வாக்காளர் பெயர் பட்டியலை மையப்படுத்தி

இடம்பெறும் தேர்தலில் வாக்கை பயன்படுத்தும் உரிமை கிடைக்கும். அதேபோன்று எல்லா வருடங்களிலும் வாக்காளர் பெயர் பட்டியலை சீர்திருத்தம் செய்யும்போது தனது பெயருடன் தனது வசிப்பிடத்தை பதிவு செய்வதுடன் 18 வயதை பூர்த்தியடைந்த அனைவரும் வாக்காளர் பெயர் பட்டியலில் பெயர் பதிவு செய்வது ஒரு பிரஜையின் பொறுப்பாகும்.

## தேர்தல் மாவட்டம் (Electoral District)

வாக்குகளை எண்ணுவதற்காக பயன்படுத்தப்படும் பிரதேசம் தேர்தல் மாவட்டமாகும். பாராளுமன்ற பொது தேர்தல், ஜனாதிபதி தேர்தல், மாகாண சபை தேர்தல் மற்றும் வெகுசன வாக்கெடுப்புகளில் தேர்தல் பிரிவாக கவனத்திற்கொள்வது நிர்வாக மாவட்டமாகும். ஆனால் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்கள் இரண்டையும் இணைத்து யாழ்ப்பாண தேர்தல் பிரிவு எனவும், வவுனியா மன்னார் மற்றும் முல்லைத்தீவு போன்ற 3 மாவட்டங்களையும் இணைத்து வன்னி தேர்தல் பிரிவை தயாரித்துள்ளதால் இலங்கையில் 22 தேர்தல் மாவட்டங்களே உள்ளது.

ஆனால் உள்ளூராட்சி மன்ற தேர்தலின்போது தேர்தல் பிரிவாக கவனத்திற்கொள்வது அந்த உள்ளூராட்சி மன்ற அதிகார பிரதேசமாகும்.

## வாக்கெடுப்பு பிரிவு (Polling Division)

பழைய தேர்தல் முறையின் அடிப்படையில் இருந்த தேர்தல் ஆசனங்கள் வாக்கெடுப்பு பிரிவாக கருதப்படும். தேர்தல் பெறுபேறுகள் வெளியிடும் போதும் வாக்காளர்களை பதிவு செய்யும் போதும் இந்த வாக்கெடுப்பு பிரிவு பயன்படுத்துவதுண்டு.

# தேர்தல் மாவட்டம் (Polling District)

வாக்களிப்பு நிலையத்திற்குரிய அதிகார பிரதேசத்திற்கு அமைவாக வாக்காளர்களின் வதிவிடத்தை தேர்தல் பிரிவாக கவனத்திற் கொள்ளப்படும். தேர்தல் மாவட்டத்தில் வாக்குகள் அதிகரிக்கும்போது அந்த தேர்தல் மாவட்டங்களினுள் வாக்களிப்பு நிலையங்கள் 2 அல்லது 3 ல் நடாத்தப்படும் (ஒரே இடத்தில்)

# அறிவிக்கப்பட்ட பிரசார அலுவலகம்

ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகள் அல்லது சுயாதீன குழுக்களின் தேர்தல் பிரசார செயற்பாடுகளுக்காக தெரிவத்தாட்சி அதிகாரியின் அனுமதியுடன் மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு அறிவித்து செயற்படுத்தும் தேர்தல் பிரசார அலுவலகத்தை இவ்வாறு குறிப்பிடுவர்.

# உறுதிப்படுத்தும் உத்தியோகத்தர்

தபால் வாக்காளராக விண்ணப்பிக்கும் போதும் மற்றும் தபால் வாக்கை பயன்படுத்தும் போதும் தபால் வாக்காளராக விண்ணப்பிக்கும் மற்றும் தபால் வாக்காளரின் தனித்துவத்தை உறுதிப்படுத்தும், அந்த வாக்காளரின் நிறுவன மேலதிகாரி உறுதிபடுத்தும் அதிகாரியாகவும் குறிப்பிடப்படுவார். தபாலில் வாக்களிக்கும் தினத்தில் இவர் வாக்களிப்பு நிலையத்தின் சிரேஸ்ட அதிகாரியின் உயர்பதவிக்கு சமமான பொறுப்புகளை வகிப்பவர் ஆவார்.

# அனுமதிக்கப்பட்ட அடையாள அட்டைகள்

வாக்களிக்கும்போது இனங்கண்டு கொள்வதற்காக அடையாள அட்டையை முன்வைப்பது கட்டாயமாகும். தேர்தல் ஆணைக்குழுவினாரால் வாக்குகளை பாவிப்பதற்கு அனுமதி பெற்ற அடையாள அட்டைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தேர்தல்

ஆணைக்குழுவினரால் இதுவரை வெளியிடப்பட்டுள்ள அனுமதி பெறப்பட்டுள்ள அடையாள அட்டைகளாக –

1. தேசிய அடையாள அட்டை
2. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
3. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்
4. அரச சேவை ஓய்வூதிய அடையாள அட்டை
5. முதியோர் அடையாள அட்டை
6. ஆட்கள் பதிவு செய்யும் திணைக்களத்தின் மூலம் மதகுரு / மத பிரிவுகளுக்காக வெளியிடப்பட்டுள்ள அடையாள அட்டை
7. தேர்தல் திணைக்களத்தால் வெளியிடப்படும் தற்காலிக அடையாள அட்டை

# XI.

# தேர்தல் அதிகாரிகளின் தொலைபேசி தொடர்புகள்

# XI. தேர்தல் அதிகாரிகளின் தொலைபேசி தொடர்புகள்

தேர்தல் ஆணைக்குழு – த.பெ.: 02 சரண மாவத்தை ராஜகிரிய – 10107

| அதிகாரி | தொலைபேசி | தொலைநகல் | மின்னஞ்சல் |
|---|---|---|---|
| தலைவர் – மஹிந்த தேசப்பிரிய அவர்கள் | 0112868444 | 0112868445 | chairman@elections.gov.lk |
| அங்கத்தவர் என். ஜெ. அபெசெகர அவர்கள். | 0112879131 | 0112879131 | member.abeysekara@elections.gov.lk |
| அங்கத்தவர்– எஸ். இரத்னஜிவன் எஸ். உல் அவர்கள். | 0112879132 | 0112879132 | member.rathnajeewan@elections.gov.lk |
| செயலாளர் | 0112879133 | 0112879133 | secretary@elections.gov.lk |

தேர்தல் செயலாளர் அலுவலகம் – த.பெ 02 சரண மாவத்தை, இராஜகிரிய – 10107

| அதிகாரி | தொலைபெசி | தொலைநகல் | மின்னஞ்சல் |
|---|---|---|---|
| பொது | 0112868441, 0112868442, 0112868443 | 0112868426 | info@elections.gov.lk |
| இயக்குனர் ஜெனரல் | 0112885207 | 0112885208 | dgelection@elections.gov.lk |
| பாராளுமன்ற தேர்தல் பிரிவு | 0112868962 | 0112868962 | addcompe@elections.gov.lk |
| உள்ளூராட்சி மன்ற பிரிவு | 0112868446 | 0112868367 | addcomla@elections.gov.lk |

மாவட்ட தேர்தல் அலுவலகம்

| மாவட்ட | அலவலகம் | தொலைபெசி | தொலைநகல் |
|---|---|---|---|
| அநுராதபுரம் | 0252222551 | 0252222551 | anuradhapura@elections.gov.lk |
| அம்பாறை | 0632224342 | 0632222077 | ampara@elections.gov.lk |
| பதுளை | 0552222424 | 0552222424 | badulla@electioms.gov.lk |
| மட்டகளப்பு | 0652224312 | 0652224374 | batticaloa@gmail.lk |
| கொழும்பு (நகரம்) | 0112872247 | 0112872248 | cplombocity@elections.gov.lk |
| கொழும்பு (மாவட்டம்) | 0112867472 | 0112867471 | colomodistrict@elections.gov.lk |
| கம்பஹா | 0332222047 | 0332222047 | gampaha@elections.gov.lk |
| காலி | 0912234028 | 0912234028 | galle@elections.gov.lk |
| அம்பாந்தோட்டை | 0472256248 | 0472256248 | hambantota@elections.gov.lk |
| யாழ்ப்பாணம் | 0212222655 | 0212228002 | jaffna@elections.gov.lk |

| | | | |
|---|---|---|---|
| களுத்தரை | 0342222266 | 0342222266 | kaluthara@elections.gov.lk |
| கண்டி | 0812233187 | 0812233187 | kandy@elections.gov.lk |
| கேகாலை | 0352222561 | 0352222561 | kegalle@elections.gov.lk |
| குருநாகல் | 0372222369 | 0372222369 | kurunegala@elections.gov.lk |
| மாத்தளை | 0662222422 | 0662222422 | matale@elections.gov.lk |
| மாத்தறை | 0412222305 | 0412222305 | matara@elections.gov.lk |
| மன்னார் | 0232222289 | 0232222289 | mannar@elections.gov.lk |
| மொனாராகலை | 0552276315 | 0552276315 | monaragala@elections.gov.lk |
| நுவரெலியா | 0522222325 | 0522222325 | nuwaraeliya@elections.gov.lk |
| பொலன்னருவை | 0272222012 | 0272222012 | pollonnaruwa@elections.gov.lk |
| புத்தளம் | 0322265246 | 0322265246 | puttalam@elections.gov.lk |
| இரத்தினபுரி | 0452222023 | 0452222023 | ratnapura@elections.gov.lk |
| திரிகோணமலை | 0262222304 | 0262222304 | trinco@elections.gov.lk |
| வவுனியா | 0242222311 | 0242222311 | vavuniya@elections.gov.lk |
| கிளிநொச்சி | 0212285664 | 0212285664 | kilinochchi@elections.gov.lk |
| முல்லைத்தீவு | 0212061426 | 0212061426 | mulativu@elections.gov.lk |

தேர்தல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணைய தளமான http://www.slelections.gov.lk/ இருந்து பெறப்பட்டவை (2018 நவம்பர் 10).

# XII.

# தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள்

# XII. தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள்

## சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்காக மக்களின் இயக்கம் (PAFFREL)

சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல் ஒன்றினை உறுதிப்படுத்துவது தேர்தல் செயற்பாடுகளை கண்காணிக்கும் நோக்கத்துடனும் அது தொடர்பிலான செயற்பாடுகளுக்கு பங்களிக்கும் நோக்கத்துடனேயே 1987ம் ஆண்டில் பெப்ரல் அமைப்பு ஆரம்பமானது. 1987ம் ஆண்டிலிருந்து இதுவரை காலமும் நடைபெற்ற அனைத்து தேர்தல்கள் தொடர்பிலும் கண்காணிப்பு செயற்பாடுகளில் ஈடுபட்ட பெப்ரல் அமைப்பு வாக்களிப்பு நிலையங்களை கண்காணிக்கும் அனுமதியை தேர்தல் ஆணைக்குழுவிடம் இருந்து பெற்றுக்கொண்டுள்ளது. அது மட்டுமன்றி 2015ம் ஆண்டிலிருந்து வாக்குகளை எண்ணும் மத்திய நிலையங்களிலிருந்து கண்காணிப்பதற்கும் அனுமதி பெற்றுக்கொண்டுள்ளது.

சாதாரண தேர்தல் கண்காணிப்பாளர்களை தவிர்த்து தேர்தல் செயற்பாடுகளின் சுயாதீன தன்மைக்காக பல செயற்பாடுகளை பெப்ரல் அமைப்பு மேற்கொண்டுள்ளது.

ஜனநாயகம் மற்றும் தேர்தல் முறை தொடர்பாக அறிவூட்டல்களை மேற்கொள்ளல், ஜனநாயகத்திற்கு சவால்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீடு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து பிரஜைகளுக்காக சிறந்த சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல் ஒன்றிற்காக நன்மை பயக்கும் நீதிமன்ற

தீர்மானங்களை பெற்றுக்கொள்ள செயற்படுவது இதன் முக்கிய செயற்பாடாகும்.

# தேர்தல் வன்முறை கண்காணிப்பு மத்திய நிலையம் (சீஎம்ஈவி)

வன்முறையற்ற தேர்தல் ஒன்றினை உறுதிபடுத்துவதற்காக தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடும் நோக்கத்தை கொண்டே தேர்தல் வன்முறை கண்காணிப்பு மத்திய நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. வாக்களிப்பு நிலையத்தினுள் நிலைய கண்காணிப்பாளரினால் கண்காணிப்பு செய்வதற்கும் வாக்குகளை எண்ணும் நிலையத்தில் கண்காணிப்பு செய்வதற்கும் தேர்தல் வன்முறை கண்காணிப்பு மத்திய நிலையத்திற்கு தேர்தல் ஆணைக்குழுவினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பினால் வாக்காளர்களை அறிவூட்டுவதுடன் தேவையான சந்தர்ப்பங்களில் நீதிமன்றில் வழக்கு தொடர்வதன் மூலம் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல் ஒன்றிற்காக தேவையான தீர்ப்பை பெற்றுக்கொள்வதும் தேர்தல் வன்முறை கண்காணிப்பு மத்திய நிலையத்தின் ஊடாக இதுவரை நடந்தேறியுள்ளது.

# தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளின் தொடர்புகள்

| அமைப்ப | மகவரி | தொலைப்பெசி |
|---|---|---|
| **சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (PAFFREL)** | இல.16,<br>பேர்ட் பிலேஸ்,<br>பாமன்கட வீதி<br>கொழும்பு 06. | 11 2 558 570<br>11 2 558 571 |

| | | |
|---|---|---|
| **தேர்தல் வன்முறை கண்காணிப்பு மத்திய நிலையம் (CMEV)** | இல.160G,<br>பூர்வாராம வீதி,<br>கிருலபனை,<br>கொழும்பு 05 | 011 2 505980 |




PAFFREL

**PEOPLE'S ACTION FOR FREE & FAIR ELECTIONS**

# No.16, Byrde Place, Off Pamankada Rd,
Colombo 06, Sri Lanka.

Tel: (+94) 11 2 558 570 / 1
Fax: (+94) 11 2 558 572
E-Mail: paffrel@sltnet.lk
Website: www.paffrel.lk



ISBN 9789554082069